



# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 7 இதழ் - 4, ஜுலை-ஆகஸ்டு 2021

R5231

## BENJAMIN'S PORTION FIVE FOLD

## பென்யமீனின் பாகம் ஐந்து மடங்கு

ஆதியாகமம் 43

"தன் சகோதரனிடத்தில் அன்பு கூருகிறவன் ஒளியிலே நிலை கொண்டிருக்கிறான்." -1 யோவான் 2:10

எகிப்திலிருந்து வாங்கி வந்த தானியம் தீர்ந்து போகும் தருவாயில் யாக்கோபு தனது குமாரர்களை மறுபடியும் தானியம் வாங்கி வரும்படி வற்புறுத்தினார். ஆனால் அவர்கள் அவர்களது இளைய சகோதரன் பென்யமீன் தங்களுடன் வரவில்லையென்றால் தங்களால் செல்ல இயலாது என்றார்கள். பிறகு சகோதரர்களில் ஒருவனாகிய யூதா, பென்யமீனுக்கு உத்தரவாதம் அளித்தான். முடிவாக யாக்கோபு, "அந்த மனிதன் (யோசேப்பு) அங்கிருக்கிற மற்ற சகோதரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு சர்வ வல்லமையுள்ள தேவன் அவன் சமூகத்தில் இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப்போனவனைப் போல் இருப்பேன்" என்று கூறி அவர் தேன், நறுமணப் பொருள் முதலானவை -களையும் இரட்டிப்பான பணத்தையும் கொடுத்து அவர்களுடன் பென்யமீனையும் அனுப்பினார்.

யோசேப்பினால் மறுபடியும் அவர்கள் எதிர்பார்க்கப்பட்டு, அவன் அவர்களுக்கு ஒரு விருந்தை ஏற்பாடு செய்தான். ஆனால் அவர்கள் முன்பு வந்தபோது அவர்களது சாக்குகளில் வைக்கப்பட்டிருந்த பணத்தினிமித்தம் மிகவும் பயந்திருந்தார்கள். அவர்கள் யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனிடம் பேசி, அவனது பதிலைப் பெற்றார்கள். எகிப்தில் இன்றைக்கு என்ன நடக்குமோ என்று பயந்திருந்ததிற்கு மாறாக அந்த பதில் இருந்தது. அவன் கூறியதாவது: "உங்களுக்கு சமாதானம்; பயப்பட வேண்டாம்; உங்கள் தேவனும் உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்கு புதையலாகக் கட்டளையிட்டார்; நீங்கள் கொடுத்த பணம் என்னிடத்தில் வந்து சேர்ந்தது என்று சொல்லி, சிமியோனை வெளியே அழைத்து வந்து, அவர்களிடத்தில் விட்டான்." அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து அவர்கள் கால்களை கழுவும்படி செய்து அவர்களது கழுதைகளுக்கு தீவனம் போட்டு, மதியான உணவிற்கு ஏற்பாடு செய்தான்.

பிறகு யோசேப்பு எகிப்தின் இராஜ குமாரனைப் போல உடையணிந்து வந்தான். அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகளை அவனிடத்தில் வைத்து, தரை மட்டும், குனிந்து அவனை வணங்கினார்கள். யோசேப்பு அவர்களது தகப்பனாரைக் குறித்து விசாரித்தான்; இளைய சகோதரன் பென்யமீனையும் விசாரித்தான். அவன் தன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல், அறைக்குள்ளே போய் சந்தோஷத்தில் அழுதான். பிறகு தன் முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்பி வந்தான். போஜனம் வைக்கச் சொன்னான். அவர்களை மூத்தவன் முதல் இளையவன் வரை வயதின்படி உட்காரவைத்து, தனக்கு முன் வைக்கப்பட்டிருந்த போஜனத்தில் அவனது பதினோரு சகோதரர்களுக்கும் பங்கிட்டு அனுப்பினான். இது அவனது சகோதரர்களை பிரமிக்க வைத்தது; அவர்கள் எல்லாருடைய பங்கைப் பார்க்கிலும் இளைய சகோதரன் பென்யமீனுடைய பங்கு ஐந்து மடங்கு அதிகமாக இருந்ததை பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். அது விசேஷித்த சலுகைக்கு அடையாளமாக இருந்தது.

இந்த கதை குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் மிகவும் எளிமையானது, மனதை தொடக்கூடியது, மிகவும் அழகானது. சத்தியத்தின் மேலுள்ள நம்பிக்கையை அதனுடன் எடுத்துச் செல்ல தேவனுடைய புத்தகத்தில் எதிர்பார்க்கப்படுகிறவைகளுக்கு முழுவதும் இசைவாக இருக்கும்படி அதன் அமைப்பு மிகவும் இயற்கையாக இருக்கிறது.

### ஆவிக்குரிய பாடம் கற்பிக்கப்படுகிறது

யோசேப்பு, மேசியாவுக்கு முன்னடையாளம் என்பதை உணர்ந்து கொள்கிற வேதமாணவர்கள் ஒரே தாயினிடத்தில் பிறந்த யோசேப்பின் இளைய சகோதரன் பென்யமீனும் ஒரு முன்னடையாளம் என்கிற கருத்தில் இருக்கிறார்கள். ஆபிரகாமின் மனைவிகள் வெவ்வேறு உடன்படிக்கைகளுக்கு நிழலாக இருப்பது போல, யோசேப்பு மற்றும் பென்யமீனின் தாயாகிய ராகேல் ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்கு நிழலாக இருக்க வேண்டும் என்று காண்கிறார்கள். இந்த உடன்படிக்கை, பலியின் உடன்படிக்கையாக, இந்த சுவிசேஷ யுகத்தில் செயல்பட்டு, இரண்டு வெவ்வேறு பரிசுத்தவான்கள் வகுப்பாரை உண்டாக்குகிறது. இந்த இரண்டு வித பரிசுத்தவான்கள் வகுப்பார் யோசேப்பு மற்றும் பென்யமீனின் மூலம் நிழலாக காண்பிக்கப்படுகிறார்கள்.

மேலான வகுப்பார் யோசேப்பின் மூலம் குறிப்பிடப்படுகிறார்கள். இது மேசியாவை, இந்த சுவிசேஷ யுகத்தில் விசேஷித்த விதமாக உண்மையுள்ளவர்களாக இருக்கக்கூடிய தேவனுடைய பிள்ளைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. அதாவது இயேசுவையும் அவரது அடிச்சுவட்டையும் பின்பற்றுகிற அனைத்து சீஷர்களையும் குறிக்கிறது. யோசேப்பினால் அடையாளப்படுத்தப்பட்ட இந்த வகுப்பார் முடிவாக, சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகருக்கு அடுத்தபடியாக பிரபஞ்சத்தின் ராஜாவாக, ஆட்சியாளராக சாம்ராஜ்யத்தின் சிங்காசனத்தை அடைவார்கள். யோசேப்பை மரண சிறைச் சாலையிலிருந்து எடுத்து தனக்கு அடுத்தபடியாக மகா மகிமையிலும் வல்லமையிலும் உயர்த்திய பார்வோனால் சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர் அடையாளப்படுத்தப்பட்டார்.

இந்த சுவிசேஷ யுகத்தில் இரண்டு வித பரிசுத்தவான்களின் வகுப்பார் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பது கொஞ்ச காலத்திற்கு முன்பு வரை அநேக வேதமாணவர்களின் கவனத்திற்கு வராதிருந்தது. அவர்கள் யோசேப்பினால் அடையாளப் படுத்தப்பட்ட ஒரு உயர்ந்த வகுப்பாரும் பென்யமீனால் அடையாளப்படுத்தப்பட்ட கொஞ்சம் கீழான வகுப்பாரும் ஆகும். பென்யமீன் என்ற வார்த்தை "எனது வலது கையின் மகன்" என்று பொருள் படுகிறது. பெனோனி "வேதனையின் மகன்" என்று பொருள்படுகிறது. இது இவனை பிரசவித்த போது இறந்துபோன அவனது தாய் கொடுத்த பெயர்.

ராகேலால் நிழலாக காண்பிக்கப்பட்ட இந்த விசேஷித்த உடன்படிக்கை மேசியாவை, இயேசுவை தலையாகக் கொண்ட சபையை பிறப்பிக்கிறது. இந்த உடன்படிக்கை இன்னொரு வகுப்பாரை பிறப்பித்து, அதன் பிறகு வேறு எதையும் பிறப்பிக்காமல் அதோடு முடிவடைகிறது. இதுவே இங்கு உண்மையான பாடமாக இருக்கிறது. இரண்டாந்தர வகுப்பார், அவர்கள் சுதந்தரிக்கப் போகிற, ஆசீர்வாதத்திற்கு "மகா உபத்திரவத்திலிருந்து வருவதால்," மகா உபத்திரவத்தின் பரிசுத்தவான்கள் என்று வேத வாக்கியங்களினால் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் யோசேப்பினால் நிழலாக காண்பிக்கப்பட்ட அதிக கனத்துக்குரிய வகுப்பாரைக் காட்டிலும் மற்ற வகுப்பார் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

### " சிறுமந்தை" – " திரள் கூட்டத்தார் "

இந்த கருத்தை தெளிவாக சமர்ப்பிப்பதற்கு வெளிப்படுத்தின விசேஷம் 7ஆம் அதிகாரத்தை நாம் பார்க்க வேண்டும். அங்கே நெற்றியில் முத்திரையிடப்பட்ட 144000 பேரின் சித்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களைப் பற்றி வெளிப்படுத்தல் 14:1-3 இல் இவர்களைத் தவிர வேறு யாரும் பாட கற்றுக்கொள்ளக் கூடாத பாட்டை பாடிக்கொண்டு சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவரோடு நிற்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இவர்கள் கண்ணாடிக் கடலின் மேல் ஆட்டுக் -குட்டியானவரோடு நிற்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. (வெளிப்படுத்தல் 15:2,3) இப்படியாக இந்த வகுப்பார் முற்றும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக, பரிசுத்தமுள்ள சிலராக, சிறுமந்தையாக குறிப்பிடப்படுவதாக காணப்படுகிறது. பிதாவனாவர், இவர்களுக்கு அவர்களது கர்த்தரும் இரட்சகருமானவரின் உடன் சுதந்தரராக ஆயிர வருட இராஜ்யத்தை கொடுக்க பிரியமுள்ளவராக இருக்கிறார்.

இஸ்ரயேலின் கோத்திரங்களிலிருந்து, கோத்திரத்துக்கு 12000 ஆக இவர்கள் இருக்கிறார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் 7:4இல் நாம் படிக்கிறோம். மாம்சீக இஸ்ரயேலர் கர்த்தரை மறுதலித்து, சிலுவையில் அறைவார்கள் என்பதை அறியாமல், தேவன் ஆரம்பத்தில் மாம்சீக இஸ்ரயேலரிடமிருந்து தெரிந்துகொள்ளப்பட்ட முழு தொகையையும் எடுத்துக் கொள்ள திட்டமிட்டிருந்தார் என்று இது குறிப்பிடுகிறதாக வேத மாணவர்களால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இஸ்ரயேலர்கள் தேடுகிறதை (மேலான ஆசீர்வாதத்தை) அடைய மாட்டார்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்களே அதை அடைவார்கள் என்பதையும், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுதல் நிறைவேறும் வரை தேசத்தில் மீதம் உள்ளவர்கள் தற்காலிகமாக குருடாக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் தேவன் முன்னறிந்தே, இஸ்ரயேலரை அடிப்படையாக வைத்தே தேவன் இந்த திட்டத்தை வைத்திருந்தார். (ரோமர் 11:7, 25-33)

பெரும்பாலான இஸ்ரயேலர்கள் சுற்றிலும் உள்ள தேசங்களுக்கு சிதறடிக்கப்பட்டு போனாலும், பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிறகு முழு தேசமும் அதாவது பாலஸ்தீனாவில் இருந்த ஒவ்வொரு கோத்திரமும் இஸ்ரயேல் என்று குறிப்பிடப்பட்டது என்பது வேதவாக்கிய பதிவுகளிலிருந்து தெளிவாகிறது. இயேசு தம்முடைய ஊழியம் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கே என்று குறிப்பிட்டார். அப்போஸ்தலர்களும் அவ்விதமே செய்தனர். உண்மையைச் சொல்லப்போனால் அழைப்பைக் கேட்டு அதற்கு மதிப்பளித்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலராகவும் தேவனுடைய பிள்ளைகளாகவும் ஆனவர்கள் எல்லா கோத்திரத்திலும் உள்ளவர்கள், சில கோத்திரத்தில் கொஞ்ச பேரும், சில கோத்திரங்களில் அநேகருமாக இருந்தார்கள். இவர்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட 144000 பேர்களில் இருந்தார்கள்.

ஆனால் பரிசுத்தவான்களில் தெரிந்து கொள்ளுதலை இது நிறைவு செய்யவில்லை. ஆகையால் தெய்வீக செய்தி புறஜாதிகளுக்கு சென்று, கொர்நேலியு என்ற புறஜாதியான் மனந்திரும்பிய முதல் கிறிஸ்தவனானான். இடைப்பட்ட நூற்றாண்டுகளில் தேவனுடைய அழைப்புக்கு, பதிலளித்து, ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு உத்தம இஸ்ரயேலராக, ஆபிரகாமின் வித்தின் ஆவிக்குரிய அங்கங்களாக சுதந்தரராக எண்ணப்பட்ட புறஜாதியார்கள் தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்களோடு முதலாம் உயிர்தெழுதலுக்கு கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். இது ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தின்படி இருக்கிறது. மாம்சீக இஸ்ரயேலர் இன்னும் தேவனுடைய இரண்டாம் தரமான வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரராக இருக்கிறார்கள்.

இப்படியாக தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின் முத்திரையிடுதல் ஏறக்குறைய கடந்த பத்தொன்பது (தற்போது இருபது) நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாக யூதர்களிலிருந்தும் புறஜாதிகளிலிருந்தும் சேர்க்கப் -பட்டவர்கள் 144000 பேர்களாக இருப்பார்கள். அவர்கள் தேவனுக்கு முன்பாக ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆட்டுக்குட்டியானவரை பின்பற்றுகிறவர்களாகவும் இராஜ்யத்தில் அவரது உடன் சுதந்தரராகவும் இருப்பார்கள். பிரிட்டிஷ் படைக்கு இந்தியர்களை சேர்ப்பது போல ஒவ்வொரு கோத்திரத்திற்கும் 12000 பேர் சேர்க்கப்படுகிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். மகா பிரிட்டனுக்கு ஆள் சேர்க்கப்படுகிறது. அந்த ஆள் சேர்ப்பு பட்டியலில் நபர்கள் எந்த பட்டணத்திலிருந்தும் அல்லது எந்த நாட்டிலிருந்தும் இருக்கலாம். எந்தெந்த படைப்பிரிவில் ஆள் குறைவாக இருக்கிறதோ அதில் சேர்க்கப்படுகிறார்கள்.

### "இவைகளுக்கு பின்பு நான் பார்த்த போது, இதோ.."

முற்றும் தெரிந்துகொள்ளப்பட்ட 144000 பேர் முத்திரையிடப்பட்ட பிறகு, திரளான கூட்டத்தைப் பற்றிய கணக்கீட்டை நாம் பெற்றிருக்கிறோம். நாம் வாசிக்கிறதாவது: "இவைகளுக்குப் பின்பு நான் பார்த்த போது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலிமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள்

கைகளில் குருத்தோலைகளை பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்.''

தெரிந்துகொள்ளப்பட்ட ராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதம் சிங்காசனமாகும், சிங்காசனத்திற்கு முன்பாக அல்ல. மேலும் அவர்களது ஜெயம் குருத்தோலைகளினால் அல்ல, மகிமையான கிரீடங்களினால் காண்பிக்கப்படுகிறது. குருத்தோலைகளுடன் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் இந்த திரளான கூட்டம், மேசியாவின் சிங்காசனத்திலும் மகிமையிலும் பங்கு பெறுகிற, தெரிந்துகொள்ளப்பட்ட மணவாட்டி வகுப்பாரைக் காட்டிலும் முற்றிலுமாக வேறுபட்ட ஒரு கூட்டம் என்று இந்த அனைத்து சூழ்நிலைகளும் காண்பிக்கின்றன. இந்த திரள் கூட்டத்தார் வேறொரு இடத்தில் "கன்னிகைகளாக'' மணவாட்டியை பின் தொடர்ந்து செல்லுகிற தோழிகளாக குறிப்பிடப்படுகிறார்கள். அவர்கள் மகா ராஜாவின் பிரசன்னத்துக்குள் அவருடன் அரண்மனைக்குள் நுழைவார்கள்; ஆனால் அவர்கள் மணவாட்டியாக இருக்க மாட்டார்கள். (சங்கீதம் 45:14,15)

இந்த திரள் கூட்டம் வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆசிரியருக்கும் விவரிக்கப்படுகிறது. அந்த விளக்கம் நமக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் வாசிக்கிறதாவது: "இவர்கள் மகா உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து இரவும் பகலும் சேவிக்கிறார்கள். சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.''

சிறு மந்தை வகுப்பார், "தேவனுடைய ஆலயம்'' என்றும் "ஜீவனுள்ள கற்கள்'' என்றும் குறிப்பிடப்படுகிறார்கள். ஆனால் திரள் கூட்டத்தார் சபையின் உள்ளேயும் முற்றிலும் ஊழியம் செய்வார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதை வேத மாணவர்கள் கவனிக்கிறார்கள். இந்த வகுப்பார் மகா உபத்திரவ காலத்தில் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்கள். இவர்கள் மணவாட்டி வகுப்பாரிலிருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும். இந்த மணவாட்டி வகுப்பார் உலகத்திலிருந்து தங்கள் வஸ்திரங்கள் கறைபடாதபடி கவனித்து காத்துக் கொள்ளுகிறவர்கள் என்றும் இராஜாவின் பிரசன்னத்தில் தங்களது வஸ்திரம் கறை திறை இல்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுகிறார்கள் என்றும் விவரிக்கப்பட்டுள்ளதை வேத மாணவர்கள் கவனிக்கிறார்கள்.

## உபத்திரவ காலத்தின் இருவித வகுப்பார்

கிறிஸ்துவை தலையாகக் கொண்ட சிறுமந்தை, ராஜரீக ஆசாரியர்கள், தெரிந்து கொள்ளப்பட்ட சபை உண்மையிலேயே உபத்திரவங்களின் வழியாய் உட்பிரவேசிக்க வேண்டும். இப்படியாக எழுதப்பட்டிருக்கிறது: "நீங்கள் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.'' நம்முடைய கர்த்தரும் கூட உண்மையிலேயே மகா உபத்திரவம், அவமானம், பாடுகள் மற்றும் மரணத்தின் வழியாய் பிரவேசித்தார். அதே போல அவரது அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் மற்றும் மற்றவர்களுக்கும் இதே வழிதான் என்பதை நாம் அறிவோம்.

எனினும் இந்த வகுப்பார் வேதாகமத்தில் மகா உபத்திரவ வகுப்பார் என்று விவரிக்கப்படவில்லை. ஏனெனில் அவர்களது மகா விசுவாசத்தின் நற்குணத்தினால் அவர்களது உபத்திரவத்தில் சந்தோஷமாக இருக்க முடிகிறது. அவற்றையெல்லாம் சந்தோஷமாக எண்ணுகிறார்கள். இவையெல்லாம் மகா மேன்மைக்கும் நித்திய மகிமைக்கும் ஏதுவாக நடக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்கள். இவர்கள் இந்த உபத்திரவத்தை சந்தோஷத்துடன் அனுபவிக்கிறார்கள். ஏனென்றால் இதெல்லாம் கொஞ்ச காலம் மட்டுமே இருக்கும் என்று கருதுகிறார்கள். தேவன் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வைத்திருக்கிற காணக்கூடாதவைகளையும், நித்திய கன மகிமையையும் தங்கள் விசுவாசக் கண்களால் பார்க்கிறார்கள்.

உபத்திரவ கால பரிசுத்தவான்கள், வைராக்கியத்தில் குறைவுபடுகிறவர்களாகவும், ஆனால் (விசுவாசத்தில்) உண்மைத் தன்மையில் குறைவுபடாதவர்களாகவும் வேத வாக்கியங்களால் பல்வேறு விதமாக சித்தரிக்கப்படுகிறார்கள். உபத்திரவ கால பரிசுத்தவான்கள் தங்கள் பலியின் பிரமாணத்தில் தொடர்ந்து செல்வதிலும் அதை நிறைவேற்றுவதிலும், உலகம், மாம்சம் மற்றும் சத்துருவுக்கு எதிராக போரிடுவதிலும், தோல்வியடைகிறார்கள். "ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினால் அடிமைத்தனத்திற்கு உள்ளானவர்கள்'' என்று வேத வாக்கியங்கள் கூறுகிறது போல மாம்சத்திற்கும், சமூக பழக்கங்களுக்கும் அடிமையாகி, தங்களது உடன்படிக்கையின் பலியின் அனுபவங்களுக்கு பயப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். (எபிரேயர் 2:15)

இந்த காரணத்தினால், அவர்கள் தேவனுடைய குமாரனுடைய சாயலாகவும், அவரது கனம், மகிமை மற்றும் சாகாமையில் பங்குபெற தகுதியுள்ளவர்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியவில்லை. இருந்தாலும், கர்த்தர் அவர்கள் மேல் இரக்கம் வைத்து, அவரிடத்தில் அவர்களது விசுவாசத்தை சோதிக்கிறார். முடிவாக தங்களது உண்மைத்தன்மையை, விசுவாசத்தை நிரூபிக்கிறவர்களுக்கு அவர்கள் ராஜ்யத்தில் உடன் சுதந்தரர் ஆவதற்கே அழைக்கப்பட்டிருந்தாலும் அதில் தோல்வியடைந்ததால் தேவன் அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்க எண்ணம் கொண்டிருக்கிறார். "நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. (எபேசியர் 4:4)

இந்த வகுப்பாரில் சுவிசேஷயுகம் முழுவதும் அபிவிருத்தி அடைந்த சிலர் இருக்கிறார்கள். ஆனால் வேத வாக்கியங்கள் இவர்களை இந்த யுக முடிவில் உலகத்தின்மேல் வருகிற உபத்திரவ காலத்துடன் சம்பந்தப்படுத்தி சித்தரிக்கிறது. உதாரணத்திற்கு அவர்கள் மகா உபத்திரவத்திலிருந்து வரவேண்டும் என்கிற அறிக்கையை எடுத்துக்கொள்ளுங்கள். மேலும் பரிசுத்த பவுலின் அறிக்கையாவது: "அவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்பதை அந்த நாளானது பரிசோதிக்கும்.'' பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் ஆகியவைகளினால் கட்டினவர்களது வேலைப்பாடு சோதனையில் நிலைக்கும் என்று அவர் அறிவிக்கிறார். அந்த நாளின் அக்கினியானது அவர்களது மகா உபத்திரவத்திற்கு காரணமாயிராது. அவர்களது விசுவாச கட்டுமானத்தை அழிக்காது. பிறகு அவர் திரள் கூட்டத்தைக் குறித்து விவரிக்கிறார். மற்றவர்கள் மரம், புல், வைக்கோல் போன்றவற்றினால் தகாத முறையில் கட்டினார்கள். அந்த நாளின் அக்கினி அந்த கட்டுமானத்தை முற்றிலுமாக அழித்துப் போட்டது. எனினும் மெய்யான அஸ்திபாரத்தின்

மேல் தகாத முறையில் கட்டினது வெந்து போனாலும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அதுவும் அக்கினியில் அகப்பட்டு தப்பினது போல – மகா உபத்திரவத்தின் நாளில் தப்பினது போல இருக்கும். மகா உபத்திரவத்தின் வழியாக அவர்கள் தேவனுடைய கிருபையை பெற்று, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாவிட்டாலும், நல்ல உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். நாம் வாசிக்கிறதாவது: "முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக, ஆசாரியராயிருந்து அவரோடு கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள்." (வெளிப்படுத்தல் 20:6)

### பென்யமீனின் ஐந்து பாகம்

தனக்கு முன் வைக்கப்பட்டிருந்த போஜனத்தில் யோசேப்பு தனது அனைத்து சகோதரர்களுக்கும் அபரிமிதமாக கொடுத்தான். ஆனால் தன் தாயின் மகன் பென்யமீனுக்கு ஐந்து மடங்கு கொடுத்தான். யோசேப்பு, மேசியாவையும் அவரது ராஜரீக அதிகாரத்தையும், மகிமையையும் அடையாளப்படுத்துவதால் அவரது சகோதரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள், மாம்சத்தின் அவரது சகோதரர்களுக்கு, இஸ்ரயேலருக்கு கொடுக்கப்படப்போகிற கிருபைகளை குறிக்கிறது. இது எகிப்தியர்களால் அடையாளப்படுத்தப்படுகிற உலகத்திற்கு மேசியாவின் ராஜ்யத்தில் கொடுக்கப்படப்போகிற பொதுவான ஆசீர்வாதத்தோடு கூட கொடுக்கப்படுவதை குறிக்கிறது என்று வேத மாணவர்களுக்கு காணப்படுகிறது.

இந்த சித்திரத்தின்படி வேதனையின் மகனாகிய பென்யமீன், கர்த்தரின் ஜனங்களாகிய திரள் கூட்டத்தை குறிப்பிடுகிறான். இவர்கள் மகா உபத்திரவத்திலிருந்து உலகத்திலுள்ள மற்றவர்களை காட்டிலும் ஓர் உயர்ந்த தளத்திற்கு ஓர் உயர்ந்த நிலைமைக்கு ஓர் உயர்ந்த ஆசீர்வதத்திற்கும் வருவார்கள். சபையைப் போல பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட அவர்கள், ஜீவனுக்கு பாத்திரராக இருந்தால், ஆவிக்குரிய ஜீவிகளாகவும் இருப்பார்கள். எனினும் மெய்யான யோசேப்பை விற்ற, அவர்களது சகோதரர்களும் அவரால் கணிசமான அளவு ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

R5232

## Lessons Learned by Joseph's Brethren

## யோசேப்பின் சகோதரர்கள் மூலம் கற்றுக்கொள்ளப்படுகிற பாடங்கள்

ஆதியாகமம் 44

"நீங்கள் சொஸ்தம் அடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்." – யாக்கோபு 5:16

யோசேப்பின் சகோதரர்கள் அவனை கொல்லுவதற்கு தீர்மானித்து, பிறகு அதைத் தொடர்ந்து தண்ணீரில்லாத குழியில் போட்டு, அதற்கு பிறகு அவனை அடிமையாக விற்றுப் போட்டார்கள். இந்த ஆரம்ப நிலையில் காணப்பட்டது போல அவர்கள் அவ்வளவு கடின மனதுடையவர்கள் அல்ல என்று இந்த பாடம் நமக்கு காண்பிக்கிறது. நம்மில் அநேகருக்கு நமது வாலிப பருவத்தில் போதிக்கப்பட்ட மொத்த துன்மார்க்கம் என்கிற போதனை பொய் என்று மறுபடியும் மறுபடியும் நிரூபிக்கப்படுகிறது; நம்முடைய சொந்த குணலட்சணங்களில் மாத்திரமல்ல; மற்றவர்களுடனான நமது அனுபவங்களிலும் நிரூபிக்கப்படுகிறது. ஒவ்வொருவரையும் துன்மார்க்கனாக கருதுகிற ஒருவர் தனது நண்பர்களையும் இதே நோக்குநிலையிலேயே நெருங்குகிறார். துன்மார்க்கத்தை கவனித்து, கற்பனை செய்து வைத்திருக்கிறபடி அவர் பார்க்கிறார். ஆனால் நல்லது எதையும் பார்க்காமல், அங்கிருக்கிற நன்மையானவைகளை தவற விடுகிறார்.

வேத வாக்கியங்களின் கூற்றே சரியான ஒன்றாக இருக்கிறது. அதாவது எல்லா மனிதரும் துன்மார்க்கர்கள், யாரும் பூரணரில்லை. ஒருவரும் ஒருவராகிலும் இல்லை. எல்லாரும் பாவம் செய்திருக்கிறார்கள். ஆரம்ப கால பாவத்தின் பலன்களில் எல்லாரும் பங்கு பெற்றிருக்கிறார்கள். இதன் பலனால் எல்லாரும் தகப்பன் ஆதாமின் பூரணத்தில் விளங்கிய தேவனுடைய மகிமையில் குறைவுபட்டிருக்கிறார்கள். பூரணம் உள்ளவர்களிடம் மட்டுமே தேவன் ஐக்கியத்தை ஏற்றுக்கொள்ளுவார் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. தேவன் தமது பூரணத்திற்கு முழுவதுமாக இசைந்து வருகிறவர்களுக்குமட்டுமே தமது கிருபையையும் நித்திய ஜீவனையும் அளிப்பார். விழுந்து போனதினால் எல்லா மனுஷரும் பாவிகளானதினால் எல்லாருக்கும் ஒரு இரட்சிப்பு தேவைப்படுகிறது; எல்லாருக்கும் ஒரு ஒப்புரவாகுதல் தேவைப்படுகிறது.

இப்படிப்பட்ட ஒரு ஒப்புரவாகுதலுக்கான சந்தர்ப்பம் இந்த சுவிசேஷயுகத்தில் சிலருக்கு மட்டுமே வருகிறது, அதுவும் கூட சில கட்டுபாடுக்குக் கீழாக. அவர்கள் நோக்கத்தில், இருதயத்தில், சித்தத்தில் பூரணராகவும், விசுவாசத்தினால் அவர்களது சகல கறைகளையும் மூடும்படியாக கிறிஸ்துவின் புண்ணியத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த நிலையில் அவர்களது எதேச்சையான மாம்சீக பலவீனத்தை புறக்கணித்து, தேவன் அவர்களை புது சிருஷ்டியாக ஏற்றுக்கொள்ளுகிறார். இப்படியாக கிறிஸ்து மூலமாக அர்ப்பணம் செய்த விசுவாசிகளாகிய சபை மட்டுமே தேவனுடைய பிள்ளைகளாக கருதப்பட்டு தொடர்பு கொள்ளப்படுகிறார்கள். தேவனுடைய குமாரர்கள் என்கிற சலுகையையும், ஜெபத்தில் பிதாவானவருடைய ஐக்கியத்தையும் அவர்களது ஆர்வங்களில் தெய்வீக மேற்பார்வையையும் பெறுகிறார்கள். இது சகலமும் அவர்களது உயர்ந்த பட்ச நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்கிற உத்திரவாதம் அளிக்கிறது. இவர்களும் கூட முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையால் பூரணப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தில் இருப்பார்கள். தேவன் அவர்களுக்காக வைத்திருக்கிற மகிமையான சகல காரியங்களுக்குள்ளும் முழுமையாக அவர்களை எடுத்துச்செல்லும்.

உலகின் நீதிமானாக்கப்படுதல் முற்றிலும் வேறுபட்ட முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேத வாக்கியங்களின்படி அதற்கான காலம், வருகின்ற யுகமாகும். அப்பொழுது மேசியாவின் ராஜ்யம் சாத்தானின் செல்வாக்கை கட்டி, சாபத்தை நீக்கி முழு மனுக்குலத்திற்கும் ஆசீர்வாதத்தை கொண்டு வரும். தேவன் தற்போது விசுவாசிகளுடன் கொண்டிருக்கிற தொடர்பை போல அப்பொழுது விருப்பமும், கீழ்ப்படிதலும் உள்ளவர்களோடு தொடர்பு கொள்ள மாட்டார். அதற்கு பதிலாக அவர்கள் அந்த ஆயிர வருட காலத்தில் மகா மத்தியஸ்தரின் கீழாக விடப்பட்டு நீதிமானாக்கப்படுவார்கள்

அல்லது உண்மையிலேயே நல்லவர்களாக ஆக்கப்படுவார்கள். விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் ஆதாமின் ஆதி பூரண நிலைமைக்கு திரும்ப கொண்டு வரப்பட்டு மாபெரும் போதகரால் போதிக்கப்பட்டு, ஆயிர வருட யுக முடிவில் பிதாவானவரிடத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கும், குமாரர்களாக அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் தயாராக இருப்பார்கள். ஆனால் ஒப்புரவாகுதலுக்கு விருப்பமும் ஆர்வமும் இல்லாதவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

நாம் இங்கே வலியுறுத்துவது என்னவென்றால், மனிதன் முற்றிலும் துன்மார்க்கன் என்று தேவன் எங்கேயும் அறிவிக்கவில்லை. ஆனால் கொஞ்ச அளவிலான அபூரணம் கூட அவரால் பொறுத்துக்கொள்ள முடியாது என்று அறிவிக்கிறார். ஆகையால் மீட்பரும் சீரமைப்பாளருமான இயேசுவின் தெய்வீக ஏற்பாடு என்னவென்றால், நமது சகல குறைபாடுகளும் சகல குறைவுகளும் சிலவாக இருந்தாலும், பலவாக இருந்தாலும், அதிகமாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும், மாபெரும் இரட்சகரால் நம் ஒவ்வொவருக்கும் சரி பண்ணப்படும் என்பதாகும். அவரது பலியும் உதவியும் இல்லாமல், பூரணத்திற்கு மீள்வதும், பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் இயலாததாக இருக்கும்.

## யோசேப்பின் சகோதரர்கள் இளகிய மனதுடையவர்கள்

யோசேப்பின் அனுபவங்கள் அவனது விசுவாசத்துடன் முழு இரக்கம், தேவனுக்கு முழு கீழ்ப்படிதல் அனைத்தும் கலந்து அவனில் மகா குணலட்சணத்தை ஏற்படுத்தியது என்பதை இந்த பாடம் காண்பிக்கிறது. ஆனால் யோசேப்பின் பத்து சகோதரர்களும் வேறொரு முறைமையினால் மன உளைச்சல் மூலம் அப்பியாசப்படுத்தப்பட்டு அதிக தயவு உள்ளவர்களாகவும், அதிகமாக சகோதர அன்பு உடையவர்களாகவும் அவர்களது தந்தை யாக்கோபுக்கு மிகவும் உண்மையுள்ளவர்களாகவும் ஆனார்கள். வாழ்க்கையின் சகல அனுபவங்களும் கசப்பானதாக அல்லது இனிப்பானதாக அல்லது நமது தவறான செய்கைகளாக அல்லது நன்மையான செய்கைகளாக இருந்தாலும், தேவனுடைய மேற்பார்வையின் கீழ், நம்மை சீர்திருத்துவதற்கும் நமக்கு நன்மை பயக்கும்படியும் கொடுக்கப்படுகிறது. எனினும் இப்படிப்பட்ட ஆசீர்வாதத்திற்கு தேவனில் நம்பிக்கை அடிப்படையாக தேவைப்படுகிறது. யோசேப்பின் நம்பிக்கையை நாம் பார்த்திருக்கிறோம். அவனது சகோதரர்கள் வித்தியாசமான குணலட்சணத்தை பெற்றிருந்தாலும், தேவனை அறிந்து அவரிடம் பயபக்தி கொண்டிருந்தார்கள். மேலும் அவர் ஒவ்வொரு தீய செயலுக்கும் நீதியான பிரதிபலன் கொடுப்பார் என்பதை எதிர்பார்க்க வேண்டும் என்பதையும் உணர்ந்திருந்தார்கள் என்பதை நமது இன்றைய பாடம் காண்பிக்கிறது.

பென்யமீன் ஐந்து மடங்கு பாகம் பெற்ற, யோசேப்பு கொடுத்த விருந்திற்கு பிறகு பதினொன்று சகோதரர்களும் எகிப்திய ஆட்சியாளரின் சலுகை மற்றும் மிகவும் சந்தோஷமான அனுபவங்களுடன் தங்களது நாட்டிற்கு புறப்பட்டார்கள் என்று நமது பாடம் நமக்குச் சொல்லுகிறது. அவர்கள் புறப்படுவதற்கு முன்பு யோசேப்பு, அவர்கள் தங்களது தந்தை பேரில் வைத்துள்ள அன்பையும், தங்கள் இளைய சகோதரன் மேல் கொண்டுள்ள அன்பையும் சோதிக்க விரும்பி, அவனது வெள்ளிப்பாத்திரத்தை பென்யமீனின் தானிய சாக்கில் போடும்படி ஏற்பாடு செய்தான். அவர்கள் தங்களது கானானுக்கு பிரயாணப்பட்டு போன பிறகு, யோசேப்பு தனது வேலைக்காரர்களை அவர்கள் பின்னே அனுப்பி, "உங்களுக்கு நன்மை செய்தவருக்கு நீங்கள் தீமை செய்தது என்ன? அவரது வெள்ளிபாத்திரத்தை ஏன் எடுத்துக்கொண்டீர்கள்? என்ன ஏமாற்றுகார மனிதர்கள் நீங்கள்" என்று அவர்களிடம் கேட்கச் சொன்னான். அதை அவர்கள் மறுத்து, அந்த பாத்திரம் எங்களிடம் கண்டுபிடிக்கபட்டால் நாங்கள் அடிமையாயிருப்போம் என்று கூறினார்கள். யோசேப்பின் கட்டளைப்படி மூத்தவன் சாக்கு முதல் இளையவன் சாக்கு வரை அவன் சோதித்த போது பென்யமீனின் சாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது. மிகுந்த வேதனையுடன் அவர்கள் அரண்மனைக்குத் திரும்பினார்கள்.

யோசேப்பு, அவர்கள் தங்களது சுயநலத்தை காண்பிக்கவும் பென்யமீனை கைவிடவும் அவர்களுக்கு சந்தர்ப்பத்தை கொடுக்கும்படி அவர்களை கடுமையாக கண்டித்தான். அவர்கள் தங்கள் அப்பாவித்தனத்தை ஆட்சேபித்து, நாங்கள் அனைவரும் உங்கள் அடிமைகளாகிறோம் என்று கூறினார்கள். ஆனால் யோசேப்பு, "இது எனக்கு தூரமாயிருப்பதாக. குற்றம் செய்த பென்யமீன் மட்டுமே எனக்கு அடிமையாயிருப்பான். மற்ற அனைவரும் உங்கள் குடும்பத்திற்கும் தகப்பனிடத்திற்கும் சென்று எகிப்தின் தானியங்களை அனுபவியுங்கள்" என்று கூறினான்.

இந்த வார்த்தைகள் அவர்களை சோதிக்கும் என்பதை யோசேப்பு அறிந்திருந்தான். அவர்கள் பென்யமீனை அடிமையாக விட்டுவிட்டு, தாங்கள் தப்பித்து தங்கள் குடும்பத்திற்கு போவார்களா? தன்னை அவர்கள அடிமையாக விற்ற போது அவர்கள் காண்பித்த அதே இரக்கமற்ற தன்மையை இப்பொழுதும் பெற்றிருக்கிறார்களா? அவர்களது எளிமையான வயதான தந்தையின் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அசட்டை செய்வார்களா?

பிறகு யூதா, தான் தகப்பனாரிடம் பென்யமீனை பாதுகாப்பாக திரும்ப கொண்டு வருவதற்கு உத்தரவாதம் கொடுத்ததை யோசேப்பிடம் கூறி வேண்டிக்கொண்டான். தங்கள் தகப்பனார் பென்யமீனிடத்தில் பட்சமாக இருந்ததையும், தான் அவனது பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுத்த காரியங்களை எல்லாம் விளக்கினான். தன்னை அடிமையாக வைத்துக்கொண்டு, பென்யமீனை விடுவிக்கும்படி அவன் யோசேப்பை மன்றாடி கேட்டுக் கொண்டதாவது: "இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடு கூடப் போக விடும்படி மன்றாடுகிறேன். உமது அடியானாகிய நான் இளையவனுக்கு பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனாரிடத்துக்கு போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை எப்படி நான் காண்பேன்."

மனமாறுதலுக்கான சாட்சியம் யோசேப்புக்கும் திருப்தியாக இருந்தது. நம் அனைவருக்கும் திருப்தியாக இருக்கிறது. நீதியை சிநேகிக்கிறவர்கள் அனைவரும் நீதியில் களிகூருவார்கள், பாவத்தை சிநேகிக்கிறவர்கள் பாவத்தில் களி கூருவார்கள். அந்த மனிதர்களில் ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை நாம் உணரும் போது, அவர்கள் நிமித்தம் மாத்திரம் நாம் களிகூறாமல், அவர்கள் அனுபவம்

கொடுத்த பாடத்திற்காகவும் களிகூருகிறோம். குற்றத்தீர்ப்புடன் நாம் பிறந்திருக்கிறோம். பாவத்துடனும், அற்பதனத்துடனும், தற்கால கொடிய குணத்துடனும் பிறந்திருக்கிறோம். இதற்கு நாம் சுதந்தரித்துக் கொண்ட பலவீனம் மற்றும் முதிர்ச்சியற்ற அனுபவமும் காரணமாக இருக்கிறது. நாமே கூறிக்கொள்ளுகிறதாவது: "நம்மைப் பற்றியும் ஒருவருக்கொருவரைப் பற்றியும் ஒரு பெரிய, பரந்த, ஆழமான அறிவு எப்படி ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது.!"

நமது வாழ்க்கையின் அனுதின அனுபவம் நமது இரக்கத்தை விரிவுபடுத்தவும் இப்படியாக நமது குணலட்சணம் அபிவிருத்தி பண்ணுவதற்கும் காரணமாயிருக்கவில்லையா? இது உண்மை என்று நாம் நம்புகிறோம். சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒவ்வொரு ஒழுங்கும் ஒரு விதி விலக்கை பெற்றிருக்கிறது. தேவ சாயல் நமது இனத்தில் ஒவ்வொருவருக்கும் போதிய அளவு இருந்து, சில சமயங்களில் நன்மையானதையும், சத்தியத்தையும் உயர்ந்ததையும் மாசற்றதையும் மெச்சுவதற்கு அனுமதிக்கிறது. இதுவே நமக்கு (மனுக்குலத்திற்கு) கொடுக்கப்பட்டதாக இருக்கிறது. அவனை பாவமும் சுய நலமும் சூழ்ந்திருப்பதால், இந்த பயபக்தியான உணர்வுகள் அபூர்வமாக அப்பியாசத்துக்கு கொண்டு வரப்படுகிறது அல்லது எண்ணத்தில் மாறுதல் உண்டு பண்ணுகிறது.

தற்கால நிலைமைகளில் ஒவ்வொரு மனிதனுக்கும் நூறு வருட கால அனுபவம் இருக்கும் பட்சத்தில் மறுபடியும் ஒரு புது ஆரம்பம் கொடுக்கப்பட்டால், கிட்டதட்ட அனைவருமே இந்த அனுபவங்களினால் பெரும்பலனை பெற்று அறிவுள்ள மற்றும் நியாயமான வாழ்க்கையை வாழ்வார்கள் என்று எண்ணுவது நியாயமானதாக காணப்படுகிறது. ஏறக்குறைய அனைவருமே மிகவும் பெருந்தன்மை உடையவர்களாகவும் மிகவும் நீதியானவர்களாகவும் கூட இருப்பார்கள். அதில் விதிவிலக்கு இருக்கக் கூடும் என்று ஒத்துக்கொள்கிறோம். தற்கால நிலைமைகளின் கீழ் மனித வாழ்க்கையை வரம்புக்கு உட்படுத்தும் தெய்வீக ஏற்பாடு ஞானமான ஒன்று என்று நாம் ஒத்துக்கொள்ளலாம்.

மனித குடும்பங்களில் சிலர் வெறும் சுயநல மனோபாவத்தை மட்டுமே அபிவிருத்தி செய்கிறதாக காணப்படுகிறது. நன்மை செய்கிற மனோபாவத்தை அபூர்வமாக அப்பியாசப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நூறு வருடங்களுக்கு மேல் வாழ்வது, சுயநலத்துடன் சக மனிதர்களை அடிமைப்படுத்துவதற்கு அதிக சந்தர்ப்பம் கொடுப்பதாக ஆகும். "நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" (நீதிமொழிகள் 14:34) என்று ஞானி சொல்லுவதற்கு ஏற்ப, தேவன் ஞானமும் வல்லமையும் உடையவராயிருந்து, நமது இனத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் மதிப்புமிக்க பாடங்களை கொடுக்கக்கூடியவராக இருக்கிறார்.

## மனிதர்கள் எப்பொழுது பலனடைவார்கள்?

முன் கூறப்பட்டதை ஏற்றுக்கொண்டு வாழ்க்கையின் சோதனைகளும், தண்டனைகளும் – தெய்வாதீனமான அடிகள் – மனிதர்களுக்கு முழுமையான பாவத்தையும் நீதியின் ஞானத்தையும் போதிக்கிறது என்று சிலர் கூறுவார்கள். இந்த மாபெரும் பாடத்தின் கருத்துக்கு இசைவாக, யோசேப்பின் சகோதரர்கள் செய்ததைப் போல நமது மனுக்குலம் அனைத்தும் குறித்த காலத்துக்குள் கற்றுக்கொள்ளும். சுய தியாகத்தின் ஒரு உடன்படிக்கைக்கு கீழாக இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கிற பரிசுத்தவான்கள் மட்டுமே இராஜ்யத்தில் மகிமையான பங்கை பெறுவார்களானால், இப்படிப்பட்ட போதனையின் பலன் எங்கே இருக்கும்? மரணமானது எல்லா நம்பிக்கைகளையும் முடிவுக்கு கொண்டு வருமானால் மீதியுள்ள மனுக்குலம் அவர்களது அனுபவங்கள் மூலம் பலனை எப்படி பெறுவார்கள்? அந்த பாடங்களை மரிப்பதற்கு முன்னே முடிக்க தவறுபவர்கள் அல்லது பரிசுத்தவான்களாக ஆவதற்கு தவறுபவர்கள் – தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவர்களாக ஆவதில் தவறுபவர்கள் எப்படி வாழ்க்கைப் பாடங்களை பயன்படுத்துவார்கள்?

நாம் அனைவரும் வேதாகம போதகங்களில் ஒரு தவறு செய்திருக்கிறோம் என்பதே அதற்கு பதில். நாம் மரண நித்திரைக்கு செல்லும் பொழுது இரட்சிப்பின் சகல நம்பிக்கைகளும் முடிந்து விட்டது என்று வேதாகமம் எங்கேயும் சொல்லவில்லை. சபை வகுப்பாரை பொருத்தவரை அவர்களுக்கு கொடுக்கப்பட்ட காலம் மரணத்துடன் முடியும் என்பது உண்மை தான். ஆனால் உலகத்தாரைப் பொருத்தவரை அது உண்மையில்லை. சபையானது ஒரு விசேஷித்த வகுப்பாராக உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு நித்திய ஜீவனுக்காக அல்லது நித்திய மரணத்திற்காக உலகத்தாருக்கு முன்பே ஒரு போதனை கொடுக்கப்படுகிறது என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். இவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் நித்திய ஜீவனை மாத்திரமல்ல, ஆனால் மானிட நிலைமைக்கு மேலான நிலைமையை பெறுவார்கள். அவர்கள் உயிர்த்தெழுதலில் ஆவியின் ஜீவியாக பரிபூரணத்தை அடைவார்கள்.

சபை வகுப்பானது மனப்பூர்வமாக பாவம் செய்வதால் மரணமானது சகலத்தையும் முடிவுக்கு கொண்டு வரும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அவர் கூறுகிறதாவது: "நீங்கள் மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்: ஆவியினாலே, நீங்கள் சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்." (ரோமர் 8:13) இதில் நீங்கள் என்ற வார்த்தை உலகத்தை குறிக்காமல் சபையை குறிக்கிறது.

மேலும் அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளை பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்." (எபிரேயர் 10: 26,27) அது தேவனுடைய விரோதிகளாக நம்மை அழிக்கும். "ஏனெனில் ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும். பரம ஈவை ருசி பார்த்தும் பரிசுத்த ஆவியை பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும் மறுதலித்துப் போனவர்கள்..... அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்." (எபிரேயர் 6:4-6)

எனினும் இந்த இரண்டு வேதவாக்கியங்களும் பிரத்தியேகமாக சபைக்கு மட்டுமே பொருந்தும். ஏனெனில் தற்காலத்தில் சபை மட்டுமே சோதனையில் இருக்கிறது. உலகத்தின் சோதனைக்கான, பரீட்சைக்கான காலம் வரப்போகிற யுகமாகும் . கிறிஸ்துவின் ஆயிர வருட காலமே உலகத்தின் மகா ஆயிர வருட நியாயத்தீர்ப்பின் நாளாக இருக்கும். அதில் தான் மனுக்குலம் அனைத்திற்கும் நித்திய

ஜீவனுக்கு பாத்திரரா அல்லது அபாத்திரா என்பது தீர்மானிக்கப்படும். தகுதியுள்ளவர்களாக காணப்படுகிற அனைவரும் முடிவாக பூரணப்படுத்தப்பட்டு, தெய்வீக ஆசீர்வாதமாகிய நித்திய ஜீவன் அளிக்கப்படும். உலகத்தின் சோதனை நாளில் அபாத்திரராக காணப்படுகிற அனைவரும் நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக தீர்க்கப்பட்டு இரண்டாம் மரணத்திற்காக நியாயத்தீர்க்கப்படுவார்கள்.

தற்கால வாழ்கையின் அனுபவம், நல்லதோ கெட்டதோ எதுவாயிருந்தாலும் உலகின் எதிர்கால சோதனையில் அது சம்பந்தம் பெறும். ஆனால் யாருடைய தீர்ப்பையும் அது தீர்மானிக்காது. தற்கால சந்தர்ப்பங்களையும் அறிவையும் தகாதவிதமாக பயன்படுத்தும் போது சிலர் எதிர்கால வாழ்க்கையில் நுழைவார்கள். அதன் நியாயத்தீர்ப்பு விகிதாச்சாரப்படி நஷ்டமாக இருக்கும். தற்கால தோல்விகளுக்கு அந்த நஷ்டம் அவர்களது அடிகளாக, அவர்களது சாட்டையடிகளாக, சரீர தண்டனைகளாக இருக்கும். வாழ்க்கையின் சோதனைகளையும் துன்பங்களையும், யோசேப்பின் சகோதரர்களைப் போல சரியானபடி அப்பியாசப்படுத்துபவர்கள் அவைகளால் மிகவும் நற்குணமுள்ளவர்களாக, மிகவும் தயவுள்ளவர்களாக, மிகவும் நீதியுள்ளவர்களாக, மிகவும் அன்புள்ளவர்களாக ஆக்கப்படுவார்கள். இப்படியாக அவர்கள் மேசியாவின் ராஜ்யத்தின் மகா நியாயத்தீர்ப்பின் நாளின் சோதனைகளுக்காக நல்ல ஒரு நுழைவை பெறுவதற்கு நன்கு தயார்படுத்தப்படுவார்கள்.

எகிப்திய அடிமைத்தனத்திற்கு விற்கப்பட்ட யோசேப்பு, அவனது சகோதரர்களுக்கு நியாயாதிபதியாக இருந்தது போல, இயேசுவும் சபையும் சேர்ந்த கிறிஸ்து உலகத்தின் நியாயாதிபதிகளாக இருப்பார்கள். அப்போஸ்தலர் கூறுவதாவது: "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா?" (1கொரிந்தியர் 6:2)

யோசேப்பு அவனது சகோதரர்களை, அவர்கள் தனக்கு முற்காலத்தில் செய்ததற்கு ஏற்ப நியாயந்தீர்க்காமல் அப்போதிருந்த அவர்களது இருதய மனோபாவத்தின்படி நியாயந்தீர்த்தது போல, எதிர்காலத்தில் உலகின் நியாயத்தீர்ப்பு அந்த சமயத்தில் மனிதர்களின் மனோபாவத்தின்படியே இருக்கும், முற்காலத்தில் அவர்கள் செய்த தவறுகளின்படி இருக்காது. எனினும் நீதியின் கொள்கை தொடர்ந்து வேலை செய்யும். பாவம் செய்கிறவன் துன்பப்படுவான். யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு செய்த தவறுகளினிமித்தம் துன்பப்பட்டார்கள். கடந்த பல வருடங்களுக்கு முன்பாக தாங்கள் செய்த பெரிய பாவத்தினிமித்தம் தாங்கள் அடைந்த பலவிதமான துன்பங்களை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இது போலவேதான் உலக ஜனங்களுக்கும் பொதுவாக இருக்கும். ஒவ்வொரு பாவமும் ஒவ்வொரு மீறுதலும் நீதியான தண்டனையை பெறும், அநீதியான தண்டனையை அல்ல – நித்திய ஆக்கினையை அல்ல.

மனுக்குலத்தின் நல்ல மற்றும் கெட்ட செய்கைகள் ஒவ்வொன்றும் அவர்களது மனோபாவத்திலும் குணலட்சணத்திலும் செல்வாக்கை பெற்றிருக்கிறது. அந்த மனோபாவமும் குணலட்சணமும் மரண நித்திரையில் இழந்து போவதில்லை. கல்லறைகளில் இருக்கக்கூடிய அனைவருக்கும் ஒரு உயிர்த்தெழுதல் இருக்கிறது. அனைவரும் மனுஷ குமாரனுடைய சத்தத்தைக் கேட்டு அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்த்தெழுவார்கள். பரிசுத்தவான்கள் உலகத்தின் நியாயதிபதிகளாக இருக்கும்படிக்கு யுகத்தின் ஆரம்பத்தில் உயிர்த்தெழுந்து வருவார்கள். பரிசுத்தமில்லாதவர்களும், சத்திய அறிவில் கொண்டு வரும்படிக்கு எழுந்து வருவார்கள். கடந்த காலத்தில் அவர்களது கிரியைகள், அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான வெளிச்சத்தின் மூலமாகவும், வரும் பலன்களை அடையும் சந்தர்ப்பத்தை அனைவரும் பெறுவார்கள். அந்த மகிமையான வெளிச்சம் அப்பொழுது எல்லா இடங்களிலும் இருக்கும். அது சகல அறியாமையையும் இருளையும் மூட நம்பிக்கைகளையும் சிதறடிக்கும். தேவனுடனான ஐக்கியத்திற்கும் நித்திய ஜீவனுக்கும் வரும் வழிக்கும் ஒளியை கொடுக்கும்.

நமது தலைப்பு வசனம் சரீர பிரகாரமாக குணமாவதை குறிப்பிடுவதாக சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் இந்த வார்த்தைகள் விசேஷமாக ஆவிக்குரிய குணமடைவதை குறிப்பிடுவதாக மற்றவர்களால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இது அதிக அளவில் மிகவும் முக்கியமானது. இந்த ஆவிக்குரிய குணமாக்குதலைக் குறித்து சங்கீதக்காரன் கூறுகிறதாவது: "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னை கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டுவார்." (சங்கீதம் 103: 3,4) தங்கள் பாவங்களை தங்களிடமிருந்து மறைக்கிறவர்களும், கர்த்தரிடமிருந்து அவைகளை மறைக்க விரும்புகிறவர்களும் பெரிய தவறு செய்கிறார்கள். அவர்கள் எந்த முன்னேற்றத்தையும் அடைய மாட்டார்கள்.

**R5234**

## Mercy is Better than Sacrifice
## பலியைப் பார்க்கிலும் இரக்கமே சிறந்தது

ஆதியாகமம் 45: 1-46:7

"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? " –சங்கீதம் 133:1

யோசேப்பு தனது சகோதரர்கள் எப்படி மாறியிருக்கிறார்கள் என்பதை பார்த்த போது, அவர்களிடம் இரக்கங்கொண்டான். அவர்கள் தனக்கு இழைத்த அநீதியை நினைத்து அவர்களது இருதயம் வருந்தியதை அவன் பார்த்த போது அவர்கள் மேல் இரக்கங்கொண்டான். வயதான அவனது தகப்பனாரிடம் அவர்கள் கொண்டிருந்த அக்கரையையும் ஒரு இரக்கமற்ற வார்த்தையினாலும் அல்லது செயலினாலும் அவரது மரணத்தை அவர்கள் விரும்பாதிருப்பதையும் கண்டபொழுது அவர்கள் மேல் முழு இரக்கங்கொண்டான். அவன் தன்னை தனது சகோதரர்களிடம் வெளிப்படுத்துகையில் எகிப்தியர்கள் அங்கே இருப்பதை அவன் விரும்பவில்லை. தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல், எகிப்தியர்களை தனது அறையை விட்டு வெளியே அனுப்பிவிட்டு உடனே சத்தமிட்டு அழுதான். பிறகு, "நீங்கள் எகிப்துக்கு போகிறவர்களிடத்தில் விற்றுப் போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான் தான்" என்று தன்னை வெளிப்படுத்தினான்.

அவனது சகோதரர்களின் கலக்கத்தை நாம் நன்கு கற்பனை செய்ய முடிகிறது. அவர்களது கஷ்டங்களும்

சோதனைகளும் மிகவும் பெருகியதாக காணப்பட்டது. அவர்களது சகல துன்பங்களுக்கிடையே யோசேப்பு தன்னை வெளிப்படுத்தினான். இப்பொழுது மொழி பெயர்ப்பாளர் இல்லாமல் அவர்களது சொந்த மொழியில் அவன் பேசுவதை கேட்கவும், தான்தான் யோசேப்பு என்று சொல்லும் போது அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள், திகைத்துப் போயிருப்பார்கள் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

ஆனால் யோசேப்பு உண்மையான முழு தயவுடனும் இரக்கத்துடனும் அவர்களை அமைதிப்படுத்த விரைந்தான். அவர்கள் செய்த தவறுக்கு அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று கூறவோ அல்லது அவர்களை கொடூரமாக பயமுறுத்தவோ இல்லை. அவர்கள் செய்த தவறுக்கு அவர்களை கோபிக்கக்கூட இல்லை. அந்த பாவத்திற்குரிய தண்டனையை முன்பே அனுபவித்து விட்டார்கள் என்று உணர்ந்து, அவர்களை ஆறுதல்படுத்தி கூறியதாவது: "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால் நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம். ஜீவரட்சணை செய்யும்படிக்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். .......பூமியில் உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்திற்கு அனுப்பினார்."

பழிவாங்குதல் எவ்வளவு அழகாக இருக்கிறது! யோசேப்பு தனது சகோதரர்களிடம் மன்னிப்பு கேட்கச் சொல்லவோ அனுதாப வார்த்தைகளை கூறச் செய்யவோ இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்களில் எத்தனை பேர் இந்த உயர்ந்த குணத்தை காண்பிப்பார்கள்! இன்னும் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வகையிலும் யோசேப்பைக் காட்டிலும் அதிக அனுகூலங்களை பெற்றிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலையும் வேத வாக்கியங்களின் போதனைகளையும் பெற்றிருக்கிறார்கள். எவ்வளவு அழகாக யோசேப்பு கிறிஸ்துவையும் அவரது ஆவியையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் ! இயேசுவின் சகோதரர்களாகிய சகல யூதர்களும் அவரை ஏற்றுக்கொண்டு, அவரது சீஷர்களாக ஆவதற்கு பதில், அவரை சிலுவையில் அறைந்ததால் நித்திய ஆக்கினைக்கு செல்வார்கள் என்று நாம் நம்பும்படி நமது இருண்ட கால விசுவாச அறிக்கைகள் நமக்கு போதித்த போது, அவைகள் நம்மை எவ்வளவு தவறாக வழி நடத்தியிருக்கின்றன!

வேதாகமத்தின் பக்கத்திற்கு பக்கம் ஒளி அதிகமாக வீசிக் கொண்டிருக்கும் இப்பொழுது மேசியாவின் நோக்கம் யூதர்களுக்கு நித்திய ஆக்கினை என்பதற்கு பதிலாக, அவர்களுக்கு தெய்வீக இரக்கத்தையும் மன்னிப்பையும் மேசியா குறிக்கோளாக வைத்திருக்கிறார் என்பதை தேவனுடைய ஜனங்கள் காண்கிறார்கள். மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, இந்த இரக்கம் சீக்கிரத்தில் அவர்களுக்கு விரிவுப்படுத்தப்படும். இது குறித்து பரிசுத்த பவுல் ரோமர் 11 : 25-33 இல் குறிப்பிடுகிறதாவது: "உங்களுக்கு கிடைத்த இரக்கத்தினாலே அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." இஸ்ரயேலரைக் குறித்து கூறும் போது தீர்க்கதரிசியும் இதே கருத்தையே குறிப்படுகிறார். "அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து அவருக்காக புலம்புவார்கள்." (சகரியா 12:10) பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு செய்த கடுமையான தவறை உணர்ந்து, உண்மையாகவே அவர்கள் துக்கிப்பார்கள். ஆனால் கர்த்தர் அவர்களை நித்திய ஆக்கினையில் தண்டிப்பதற்கு பதிலாக, அவர்களிடத்தில் கிருபையுள்ளவராக இருப்பார். இது குறித்து அவர் கூறுகிறதாவது: "அவர்களின் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்." இன்றைய நமது அடையாளமான பாடத்திற்கு எவ்வளவு அழகாகவும் இசைவாகவும் இருக்கிறது ! யோசேப்பின் பத்து சகோதரர்கள் இஸ்ரயேல் ஜனங்களையும், எகிப்தியர்கள் புறஜாதிகளையும், பென்யமீன் திரள் கூட்டத்தையும், யோசேப்பு, இயேசு தலையாகவும் அவரது சரீர அங்கங்களாகிய ஜெயங்கொண்ட சபையும் சேர்ந்த தெரிந்துகொள்ளப்பட்ட மேசியாவின் வகுப்பாரையும் நிழலாக காண்பிக்கிறார்கள்.

### "எருசலேமுடன் பட்சமாய்ப் பேசுங்கள்"

வேதாகமப் பதிவு ஆரம்பத்திலிருந்தே தனக்குத்தானேயும் தெய்வீக குணலட்சணத்திற்கும் இசைவாக இருக்கிறது. இருண்ட கால விசுவாச அறிக்கைகளில் கவனம் செலுத்தியதினால் தான் நமக்கு சோதனைகள் எழும்பின. தற்கால பாடுகளிலும், தன்னைத்தான் வெறுப்பதிலும் இயேசுவோடு இணைந்து அவரை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவர்களைத் தவிர யாரும் ஆவிக்குரிய இஸ்ரயேலரின் அங்கமாகவும், வரக்கூடிய ராஜ்யத்தில் உடன் சுதந்தரத்தை பெறவும் முடியாது என்று வேதாகமம் உண்மையிலேயே கூறுகிறது. யூதர்கள் உள்ளடக்கிய மற்ற அனைவருக்கும் நித்திய ஆக்கினை என்று சாதாரண செய்தியாக உலகிற்கு கூறுவது நாம் செய்கிற தவறாக இருந்தது.

முற்றிலும் மாறாக, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ராஜ்யத்தை பெறுவார்கள் என்றும், மாம்சீக இஸ்ரயேலரும் உலகத்தாரும் உயர்ந்த மகிமையையும் ஆசீர்வாதத்தையும் இழப்பார்கள் என்றும் நாம் இப்பொழுதும் பார்க்கிறோம். ஆனால் ஒரு ராஜ்யத்தை ஏற்பாடு செய்து அது மாம்சீக இஸ்ரயேலர் மேல் தேவையான ஆசீர்வாதங்களை அளிக்கவும், அவர்கள் மூலமாக இறுதியில் சகல ஜனங்களுக்கும் அளிக்கவும் தேவன் எண்ணங்கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

இதுதான் யோசேப்பின் சகோதரர்களின் முழு மன்னிப்பினால் போதிக்கப்படுகிற பொதுவான பாடமாக இருக்கிறது. இறுதியாக யூதர்களுக்கு வந்த செய்தியை தெய்வீக திட்டத்திற்கு ஏற்றபடி நிறைவேற்றுவதே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட உறதிமொழி. அதாவது அவர்கள் மேசியாவை சிலுவையிலறைந்தது தெய்வீக திட்டத்தை சரியானபடி நிறைவேற்றுவதற்காகவே ஆகும். இதன் மூலம் தேவனுடைய ஆசீர்வாதம் பூமியின் சகல வம்சங்களுக்கும் கிடைக்கும்படி செய்தது. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த பேதுரு பேசிய வார்த்தைகளுக்கு இது ஒத்திருக்கிறது. "நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்று கூறி வருந்திய யூதர்களுக்கு இந்த காரியத்தை விளக்கினார். (அப்போஸ்தலர் 3:17) பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே." (1கொரிந்தியர் 2:8)

யூதர்களிடம் காண்பிக்கப்பட்ட தேவனுடைய மனோபாவத்திற்கு, யோசேப்பின் சகோதர்களிடம் அவனது மனோபாவம் நிழலாக இருந்தது என்று ஏசாயாவின் தீர்க்க தரிசனத்தில் தெளிவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசாயா 40:1,2) அந்த தீர்க்கதரிசனம் இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அது தற்கால யூதருக்கான செய்தியாக இருக்கிறது என்று நாங்கள்

நம்புகிறோம். அது நித்திய ஆக்கினையைக் குறித்து ஒரு வார்த்தைக் கூட கூறவில்லை. மாறாக பரிசுத்தத பவுலின் அறிக்கைக்கு இது மிகவும் முழுமையாக ஒத்திருக்கிறது. அதாவது இந்த யுக முடிவில் யூதர்களுக்கு தேவனுடைய கிருபை திரும்ப கிடைக்கும். அவர்கள் இயேசு தலையாக இருக்கிற மேசியாவின் சரீரமாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர் மூலமாக இரக்கத்தை பெறுவார்கள். நாம் வாசிக்கிறதாவது: "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள், எருசலேமுடன் பட்சமாய் பேசி, அதின் போர் முடிந்தது என்றும் அதின் அக்கிரமம் நிவர்த்தியாயிற்று என்றும் அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் (இரண்டாவது பாகம்) அடைந்து தீர்ந்தது என்றும் அதற்கு கூறுங்கள் என்று உங்கள் தேவன் கூறுகிறார்."

இஸ்ரயேல் தனது இரட்சகரை ரோமர்களிடம் விற்று மரணத்திற்கு ஒப்புக் கொடுத்ததால், அவமானம், துன்பம், இழிவு ஆகியவைகளின் பாத்திரத்தில் ஏறக்குறைய பதினெட்டு நூற்றாண்டுகளாக குடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த பெருந்துன்பம் தங்களை கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று தவறாக கூறிக் கொள்ளுகிறவர்களாலேயே வந்திருக்கிறது என்பதில் நாம் வருந்துகிறோம்! இப்படியாக கிறிஸ்துவின் ஆவியை புரிந்து கொள்ளுதில் தவறியதற்கு அநேக காரணங்களை கொண்டிருந்தார்கள் என்பதில் நாம் வருந்துகிறோம்.! உண்மையாக யூதர்களும், பொய்யான யூதர்களும் இருக்கிறதைப் போல உண்மையான கிறிஸ்தவர்களும் பொய்யான கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்வதில் மூலமே அவர்களால் இதை புரிந்து கொள்ள முடியும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." (ரோமர்8:9)

## யோசேப்பு நீண்ட காலமாக தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருந்தான்

யோசேப்பை புரிந்துகொள்ளுவதில் அவனது சகோதரர்கள் தோல்வியடைந்திருந்தார்கள். அவனது குணலட்சணத்திற்கும் அவர்களது குணலட்சணத்திற்கும் அவ்வளவு வித்தியாசம் இருந்தது. அவர்கள் அதிக இரக்க குணமுள்ளவர்களாகவும், இளகிற மனதுடையவர்களாக ஆகியிருந்தும், போதுமான அளவு கசப்பு மற்றும் பகைமையின் ஆவியை உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் யோசேப்பின் இடத்தில் இருந்திருப்பார்களேயானால், எப்படியாவது எதிர்கால தண்டனை கொடுக்கும்படி செய்திருப்பார்கள். ஆகையால் சகோதர அன்பும் தயவும் உடைய யோசேப்பின் வார்த்தைகளில் ஆச்சரியப்பட்டு அதன் அனைத்து அர்த்தங்களையும் நம்ப முடியாதவர்களாக இருந்தனர். அவனது தகப்பனார் யாக்கோபு நிமித்தம் அவன் அவர்களை தயவாக நடப்பித்தான் என்று முடிவு செய்தார்கள்.

வருடங்கள் கழிந்த பிறகு, யாக்கோபு மரித்த போது, பத்து சகோதரர்களும், தங்களை யோசேப்பு பழிவாங்குவான் என்று பெரும் நடுக்கத்தில் இருந்தார்கள். அவர்கள் யோசேப்பிடம் சென்று அவனது மன்னிப்பை தொடரும்படி கேட்டுக்கொண்டார்கள். யோசேப்பு அவர்களிடம் கூறினதாவது: "பயப்படாதிருங்கள்: நான் தேவனா? நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால் பயப்படாதிருங்கள். நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய் பேசினான்." (ஆதியாகமம் 50:19-21)

## யோசேப்பு தேவனால் போதிக்கப்பட்டான்

எனினும் அவன் பாடத்தைக் கற்றுக் கொண்டான். தேவனே அவனுக்கு போதித்தார் என்பது வெளியரங்கமாயிருக்கிறது. அவனது சகோதர்களுக்கு விரோதமான பழிவாங்கும் எண்ணம் இல்லவேயில்லை. அவர்களது பாவங்களுக்காக அவர்களுக்கு வந்த தண்டனைகள் அனைத்தும் தேவனால் வந்ததேயொழிய அவனால் அல்ல. அவர்கள் பெற்ற தண்டனை பல வருடங்களாக பெற்ற மனவேதனை, பயம் மற்றும் துன்பம் வரும் என்கிற பயம் ஆகியவையாகும். யோசேப்புக்கு தெய்வீக ஏற்பாடுகளை ஒழுங்குப்படுத்துவதில் பங்கு ஏதுவுமில்லை. ஒவ்வொரு தவறுக்கும் எப்பொழுதும் நீதியானது தண்டனையை வழங்குகிறது. யோசேப்பு பெருந்தன்மையுடையவராக அன்புடையவராக மகா இரட்சகருக்கும் அவரது மேசியாவின் ராஜ்யத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார்.

அவரது சொந்த அனுபவங்கள் அது போலவே இருந்தது. ஒரு மனுஷன் மிகவும் குறைவான சந்தர்ப்பங்களுடன் கிறிஸ்துவின் ஆவியாகிய சத்திய ஆவியின் ஒரு விரிவான கிரகித்தலை பெற்றிருந்ததை நாம் மிகவும் ஆச்சரித்துடன் கவனிக்கிறோம். பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிற நாம், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் உதாரணமான வசனங்களையும் கடந்த கால சகல சரித்திர ஏடுகளையும் பெற்றிருக்கிற நாம் யோசேப்பின் காலடியில் இன்னும் அமர்ந்து, எப்படி அவர் தேவனைப் பற்றி அறிந்து கொண்டார் என்று ஆச்சரியத்துடன் உணர்ந்து, அதற்கு ஒப்பான பாடங்களை நமக்கே உபயோகிக்கலாம். அவர் அவ்வளவு கசப்பான அனுபவங்களை பெற்ற போது ஒரு முறுமுறுப்பு கூட இல்லை. ஒரு குறை கூறும் வார்த்தை கூட இல்லை! ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொன்றிலும் அவன் தேவனுடைய நன்மை. ஞானம், அன்பு மற்றும் வல்லமைக்கு சாட்சியமளிக்கிறான். அவனுக்கு வந்திருந்த அனுவங்களில் ஒரு சில மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் முழு திட்டத்திலும் கெடுதி ஏற்பட்டிருக்கும் என்பதையும் வாழ்க்கைக்கு தேவையான சில பாடங்களை அவன் கற்றுக் கொள்ள தவறியிருப்பான் என்பதையும் உணர்ந்தான்.

இயேசுவை பின்பற்றுகிற அனைவரும் தங்களது சகல சோதனை அனுபவங்களிலும் எந்த அளவுக்கு கர்த்தரை நோக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்! தேவனுக்குள் விசுவாசத்தை பெற்று, அதை அப்பியாசப்படுத்துவது நம் அனைவருக்கும் எவ்வளவு தேவையாயிருக்கிறது! சகலமும் நமக்கு நன்மைக்கேதுவாய் நடக்கும்படிக்கு அவர் விருப்பம் உடையவராகவும், செய்யக்கூடியவராகவும், காண்கிறவராகவும், அறிந்தவராகவும் இருக்கிறார். ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். ஏனெனில் அவரது சித்தத்தின்படி நம்மை அழைத்திருக்கிறார். ஏனெனில் நமது குணலட்சணத்தை அபிவிருத்தி செய்வதின் மூலம் நமது அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்படி நாடுகிறோம். அது "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்திலும்" நமது இரட்சகரின் உடன் சுதந்தரத்திலும் பங்கடையச் செய்யும்.

## எகிப்தில் யாக்கோபு

அடுத்த ஐந்து வருட பஞ்ச காலத்திற்கு, அவனது தகப்பனாரும் முழு குடும்பமும் எகிப்தில் இருக்க வேண்டும் என்று யோசேப்பு திட்டமிட்டான். கால்நடைகளை பாராமரிக்க தகுதியாக கோசேன் பகுதியை கொடுக்க நினைத்தான். பார்வோன் அவனது தலைமை அதிகாரியான யோசேப்புடன் ஒரே மனதாயிருந்து, அவனது மேலாண்மையின் கீழ், தாம் செல்வ செழிப்பாய் இருப்பதில் சந்தோஷப்பட்டு, அவனுக்கு முழுவதுமாக இணங்கி, வயதான யாக்கோபும் ஸ்தீரிகளும் குழந்தைகளும் பிரயாணப்பட்டு வர கழுதைகளும் ஒட்டகங்களும் அவர்களுக்கு வசதியாக இருக்காது என்று வண்டிகளை அனுப்பினான். பிரயாணத்துக்கு தின்பண்டங்களையும்

கொஞ்சம் அன்பளிப்புகளையும் தனது அன்பின் நிமித்தமாக அனுப்பினான். யோசப்பேபு தனது தகப்பனுக்கு ஒரு விசேஷித்த செய்தியையும் அனுப்பினான். "எகிப்திலே எனக்கு உண்டாயிருக்கிற சகல மகிமையையும், நீங்கள் கண்ட யாவையும் என் தகப்பனுக்கு அறிவித்து, அவர் சீக்கிரமாய் இவ்விடத்திற்கு வரும்படி செய்யுங்கள் என்று சொன்னான்." அவர்களை முத்தமிட்டு வழியில் சண்டை போட்டுக் கொள்ள வேண்டாம் என்று சொல்லி அனுப்பினான்.

**"வழியில் சண்டை போட்டுக்கொள்ளாதிருங்கள்"**

யோசேப்பு மனித சுபாவங்களை மிகவும் சரியாக கிரகிக்கிறவன். எல்லா சந்தர்ப்பங்களின் கீழ் சண்டை போட்டுக் கொள்ள வேண்டாம் என்று தனது சகோதரர்களிடம் சொல்லியிருக்க வேண்டிய அவசியமில்லை என்று அநேகர் நினைக்கலாம். அநேகர் இப்படியாகக் கூறியிருக்கலாம்: "அவர்களது அனுபவங்களில் தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக அவர்கள் அதிக சந்தோஷமடைந்திருப்பார்கள். அவர்களிடையே அன்பு பரவி, சண்டையில்லாதிருக்கும்." எனினும் மாறானதே அநேகந்தடவை உண்மையாக இருக்கிறது. சொத்து வரும் போது வெகுமதியினிமித்தம் சண்டை வருதற்கும், சுயநலமும் பொறாமையும் வருதற்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

முந்தைய நிலைமையில் சகோதரர்கள் பென்யமீனிடத்தில் பொறாமை கொண்டிருக்கலாம். ஏனெனில் யோசேப்பிடமிருந்து அதிக கவனிப்பும் முந்நூறு வெள்ளிக் காசுகள் அன்பளிப்பும் அவனுக்கு கிடைத்தது. கோசேன் நாட்டில் எவ்வளவு சுதந்தரம் என்பதில் அவர்களுக்குள் வினவியிருக்கலாம். யோசனை எல்லாம் யோசேப்பிடமிருந்தே வந்திருக்கும். அதில் அதிகமான சலுகைகள் பென்யமீனுக்கு கிடைத்திருக்கும். யோசேப்பு "வழியில் சண்டை போட்டுக் கொள்ளாதிருங்கள்" என்று கூறிய எச்சரிக்கை அந்த நேரத்துக்கானதாக இருந்தது.

கர்த்தருடைய சகோதரர்களிடமும் கூட இப்படியே நடக்கும் என்று நாம் அறிந்திருக்கிறோம். உபத்திரவத்தில் அவர்கள் இருதயம் கர்த்தரை நோக்கி கதறுகின்றன. ஆனால் செழுமையில் ஒருவருக்கெதிராக எரிச்சல் அடைகிறார்கள். ஒருவருக்கொருவர் வாய்ப்புகள், ஆசீர்வாதங்கள் மற்றும் சலுகைகளில் பொறாமையும் பகைமையும் கொள்கிறார்கள். என்ன ஒரு மாபெரும் தவறு ! ஆண்டவரின் கண் அவன் கிறிஸ்துவின் சாயலில் முன்னேறுவதை கவனிக்கிறது என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். சகோதர அன்பு குணலட்சண சோதனைகளில் ஒன்று என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இது எல்லா வகைகளிலும் உண்மை. ஏனெனில் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள், மற்றவர்களைக் காட்டிலும் அதிக துன்பத்தை கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நமது உறவின் நெருக்கம் மற்றும் ஒருவருக்கொருவரை பற்றிய அறிவும் குறைகூறுதலுக்கும் தீய கருத்துகளுக்கும் நமக்கு சந்தர்ப்பங்களை கொடுக்கின்றன. மற்றவர்களைக் குறித்து இவைகள் எழும்பக்கூடாது. "வழியில் நீங்கள் சண்டை போட்டு கொள்ளாதிருங்கள்" என்கிற யோசேப்பின் வார்த்தையை தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் ஏற்றுக்கொள்வது நல்லது. நமக்கும் கர்த்தரால் திட்டமிடப்பட்ட வழி இது தான். இது இடுக்கமான துன்பம் நிறைந்த வழி; இது மாம்சத்திற்கு முழுமையாக துன்பமும் ஆவிக்கு சோதனைகளும் பரீட்சைகளும் நிறைந்ததாக இருக்கிறது. விகிதாச்சாரப்படி அன்பும், தயவும், இழப்பும் உதவியும் அங்கே இருக்க வேண்டும். இந்த பாடத்தின் தலைப்பு வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள சங்கீதக்காரனின் வார்த்தைகள் கர்த்தரின் சோதனைகளுக்காக தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. "இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது.?"

சபையாகிய சகோதரர்களின் ஒற்றுமையை ராஜாவும் பிரதான ஆசாரியனும் தங்களது பதவியை ஏற்கும் போது அவர்கள் விலைமதிப்பற்ற தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு ஒப்பிட்டு சங்கீதக்காரன் தொடர்ந்து எழுதுகிறார். அபிஷேக தைலம் பரிசுத்த ஆவியை நிழலாக காண்பிக்கிறது என்ற இந்த விளக்கம் தெளிவாக இருக்கிறது. மேலும் இந்த அபிஷேக தைலம் பிரதான ஆசாரியனின் தாடியிலும் அங்கிகளின் மேலும் வழிந்து முழு சரீரத்தை அது அபிஷேகம் பண்ணுகிறது. அந்த ஆசாரியன் இயேசுவை தலையாகவும் சபையை அவரது சரீரமாகவும் கொண்ட ராஜரீக ஆசாரியராகிய மெல்கிசேதேக்கை அடையாளப்படுத்துகிறார். பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு வந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது சுவிசேஷயுகம் முழுவதும் தொடர்கிறது. அது அவரது உண்மையான சகல அங்கங்களுக்கும் எண்ணை பூசுதலை, அபிஷேகத்தைச் கொடுக்கிறது. இந்த அபிஷேத்தின் மூலம் இந்த அங்கங்கள் கிறிஸ்துவுடன் ஒருவராக அங்கீகரிக்கப்படுகிறார்கள். "ஏனெனில் எல்லோரும் ஒரே ஆவியிலே ஒரே சரீரத்துக்குள் ஞானஸ்நானம் (அபிஷேகம்) பண்ணப்பட்டோம்." (1கொரிந்தியர் 12:13)

**R5236**

## A Convincing Proof of the Resurrection
## உயிர்த்தெழுதலுக்கு திருப்திகரமான ஒரு ரூபகாரம்

*"அவிசுவாசியாயிராமல், விசுவாசியாயிரு." –யோவான் 20:27*

நமது தலைப்பு வசனத்திற்கு முந்தைய சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலர் தோமா இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு அவர் அளித்த எந்த தரிசனத்திலும் இருக்கவில்லை. தோமா சந்தேகப்படக்கூடிய மனதை உடையவராக காணப்படுகிறார். இயேசுவின் தரிசனத்தை பார்த்ததை மற்ற அப்போஸ்தலர்கள் சொல்ல பரிசுத்த தோமா கேட்டார். இந்த சாட்சியம் மூலம் அவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்ப முடியவில்லை என்பதை உணர்ந்தார். தனது சகோதரர்கள் மிகவும் சுலபமாக வஞ்சிக்கப்பட்டிருந்ததாக அவர் நினைத்தார்.

பரிசுத்த தோமா தனது சக சீஷர்கள் தம்மை வஞ்சிக்க முயற்சித்தற்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால் தான் பெற்ற எந்த சாட்சியத்தையும் நம்ப முடியாது என்று அறிவித்தார். அவர் கூறியதாவது: "அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான காயத்தை நான் கண்டு,அந்த காயத்தில் என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றார்." அவர் மரிக்கவில்லை என்று நீங்கள் என்னை நம்பச் செய்ய முடியாது. ஒருவர் மரணத்தில் சென்ற பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு இருக்கிறார் என்று என்னை நம்ப வைக்க முடியாது. அந்த வஞ்சகம் எங்கேயிருந்து வந்தது என்றோ, ஆனால் சகோதர்களாகிய நீங்கள் மிகவும் சுலபமாக வஞ்சிக்கப்பட்டதைப் பற்றி என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

ஒரு வாரத்திற்கு பின்பு, இயேசு "மேல் அறையில்" இரண்டாவது தடவையாக தோன்றினார். அவர்களுக்கு

வாழ்த்து சொன்ன பிறகு, அவர் பரிசுத்த தோமாவிடம் கூறியதாவது: "நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார். உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு." மறுபடியும் அவர் "நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்பும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே" என்று சொன்னார். சீஷர்கள் ஆவியின் ஜீவியை பார்த்ததில்லை. உண்மையான மாம்சமும் எலும்பும் உருவாக்கப்படுதலைத் தான் அவர்கள் பார்த்தார்கள். கர்த்தர் கேட்டு கொண்டதைப் போல பரிசுத்த தோமா செய்தார். பிறகு அவர் கூறியதாவது; "என் ஆண்டவரே என் தேவனே!" அவர்தான் கர்த்தர் என்பதை அவர் ஒத்துக்கொண்டார். அது மாயத்தோற்றம் அல்ல. சகோதரர்கள் வஞ்சிக்கப்படவில்லை. அவர் தான் விசுவாசக் குறைவினால் வஞ்சிக்கப்படும் நிலைமைக்கு அருகே வந்திருந்தார்.

இந்த சம்பவத்தில் நமது கர்த்தர் தம்மை பின்பற்றுகிற அனைவருக்கும் ஒரு உதவிகரமான பாடத்தை கொடுத்திருக்கிறார் என்பதில் நாம் சந்தேகப்பட முடியாது. கர்த்தரின் உயிர்த்தெழுதலை அப்போஸ்தலரில் யாரும் சந்தேகப்படும்படி காணப்படாதிருந்தால் இந்த உண்மைக்கு அவர்கள் திருப்திகரமான ரூபகாரத்தை அவர்கள் கொண்டு வந்திருக்க முடியாது. "நாம் ஏன் மேலும் விசாரணை பண்ணாமல் போனோம்" என்று அவர்கள் அதன்பிறகு நினைத்திருப்பார்கள். ஆனால் நாம் இங்கே விசாரணையின் ரூபகாரத்தை பெற்றிருக்கிறோம்.

சில ஜனங்கள் இயற்கையிலேயே மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் கர்த்தர் அதிருப்தியடைவார் என்று நாம் நினைக்க முடியாது. நமது கருத்தின்படி, உண்மையிலேயே ஆராய விரும்புகிறவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். எளிதில் எதையும் நம்புகிறவர்களை, எளிதில் சம்மதிக்க வைக்கக்கூடியவர்களை நாம் இயற்கையாகவே நாம் ஏற்றுக் கொள்ள மறுப்போம். பரிசுத்த தோமாவைப் போல மனோபாவம் உடையவர்களை நாம் உயர்வாக கூட நினைப்போம். இந்த அப்போஸ்தலரைப் போல சரிகட்ட முடியாத யோசனையுள்ளவர் இருப்பதினால் நாம் சந்தோஷப்படுகிறோம்.

இது சம்பந்தமாக கர்த்தர் கூறியதாவது: "நீ என்னை கண்டதினால் விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்." இந்த வார்த்தைகள் மூலம் கர்த்தர் என்ன சொல்கிறார் என்ற கேள்வி எழலாம். உங்களை சம்மதிக்க வைக்க முடியவில்லை என்பதற்காக உங்களை வாழ்த்திக்கொள்ளாதீர்கள் என்று கூறியிருக்கலாம். விசுவாசம் உள்ளவர்களுக்கு, காணாமல் விசுவாசிப்பவர்களுக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு என்று அவர் கூறியிருக்கலாம்.

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படும் சமயத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சீஷர்கள் இருந்தார்கள். ஒரு சமயத்தில் அவர்கள் பார்த்ததாக அப்போஸ்தலர் கூறுகிறார். (1கொரிந்தியர் 15:6) ஆனால் அதன் பிறகு, மற்ற சகோதரர்களின் சாட்சியத்தை மட்டுமே கேட்டு காணாமல் விசுவாசிக்கிறவர்களாக இருந்தார்கள். நாமும் கூட இந்த பிரிவை சேர்ந்தவர்களாக இருக்கிறோம். சுவிசேஷ யுகத்தில் உள்ள அனைத்து சபைகளும் வெளிப்படையான விளக்கங்களை காணாமலேயே விசுவாசிக்கிறார்கள். இதன்படி கர்த்தர் நம்மேல் விசேஷித்த பிரியம் உள்ளவராக இருப்பாரா என்பதை நாம் அறியோம். ஆனால் நாம் நினைக்கவில்லை. நாம் லேசான ரூபகாரத்தைக் கொண்டோ அல்லது மாபெரும் ரூபாகரத்தைக் கொண்டோ விசுவாசிக்கிறோமா என்பது நமது மூளையின் அமைப்பை பொருத்தேயாகும். தேவனால் அழைக்கப்பட்ட அனைவரும் போதுமான ரூபகாரத்தை பெறும்படி அவர் பார்க்கிறார். நமது விசுவாசத்தில் நாம் நிலைத்திருக்கும்படி அப்போஸ்தலர் காலத்தில் இருந்தே அவர் நமக்கு அதிகப்படியான ரூபகாரங்கள் கொடுக்கிறார். பரிசுத்த தோமாவின் சந்தேகத்திற்கான பலனையும் கர்த்தரின் சுபாவ மாற்றத்தின் அவரது விளக்கத்தையும் நாம் பெற்றிருக்கிறோம்.

## கிறிஸ்தவ முன்னேற்றத்தில் விசுவாசமே மையம்

இயேசு ஏன் விசுவாசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார் என்ற கேள்வி கேட்கப்படலாம். விசுவாசம் இல்லாமல் பரிசுத்த தோமா அவருடைய சீஷனாக இருக்கவே முடியாது என்று ஏன் அவர் குறிப்பாக உணர்த்துகிறார்? விசுவாசத்திற்கு எந்த எல்லையும் காண முடியவில்லை என்றும் தேவன் விசுவாசத்தை ஆசீர்வதிப்பதற்கான காரணத்தை காண முடியவில்லை என்றும் அநேகர் நம்மிடம் கூறுகிறார்கள். மேலும் அவர்களது அபிப்பிராயத்தின்படி செயல்களுக்கே பரிசளிப்பார் என்று கூறுகிறார்கள். "எங்களால் முடிந்த அனைத்து நல்ல காரியங்களையும் நாம் செய்கிறோம்" என்று அவர்கள் கூறுகிறார்கள். தங்களால் முடிந்ததை செய்யாதவர்கள் அடிகளை பெறுவார்கள் என்ற கருத்தில் வேதாகமம் எப்பொழுதும் நிலைத்திருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அவர்களது விசுவாசத்திற்கேற்ப பரிசளிக்க எண்ணங் கொண்டிருக்கிறார் என்ற கருத்தையும் வேதாகமம் கொண்டிருக்கிறது. பூரண விசுவாசத்தை அப்பியாசப்படுத்தாதவர்கள் அவரது சீஷனாக இருக்க முடியாது. ஒருவனுக்கு விசுவாசம் இல்லையென்றால் அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க இயலாது என்று வேதாகமம் கூறுகிறது.

தேவன் செய்திருக்கிற காரியங்களிலும் அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற காரியங்களிலும் வைத்திருக்கிற விசுவாசமே கிறிஸ்தவ முன்னேற்றத்தின் மிகவும் மையமாக தேவனுடைய ஏற்பாடுகளில் செய்யப்பட்டிருக்கிறது. தேவனுடைய கிருபைகளினால் தற்கால ஆச்சரியமான சந்தர்ப்பங்களை விசுவாசமானது நாமே பயன்படுத்த இயலும்படி செய்கிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்." ஆனால் நிலைமை இப்பொழுதைப் போலவே எப்பொழுதும் இருக்கும் என்பதோ அல்லது தங்கள் மனதில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த முடியாதவர்களை எப்பொழுதுமே தேவன் நிராகரிப்பார் என்பதோ அதன் பொருளல்ல. ஆனால் தற்காலத்தில் விசுவாசமுள்ளவர்களைத் தவிர வேறு யாரையும் தேவன் இரட்சிக்க மாட்டார் என்பதே அதன் பொருள்.

எனினும் சபையானது தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களது விசுவாசத்திற்கு பரிசளித்தலுக்குப் பிறகு கர்த்தர் சகல மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கு உலகத்தோடு தற்போது விசுவாசத்தை அப்பியாசப்படுத்தி கிறிஸ்துவும் சபையும் சேர்ந்த வகுப்பாரோடு தொடர்பு கொள்ளுவார் என்று வேத வாக்கியங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது. அடுத்த யுகத்தில் இப்பொழுதைக் காட்டிலும் குறைவான விசுவாசமே தேவைப்படும். மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும். பிறகு மனுக்குலம் விசுவாசத்தில் நடக்க கடமைப்பட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் தரிசித்து நடப்பார்கள். நாமோ இப்பொழுது தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.

இயற்கையின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும் பொழுது, உலகை தேவன் ஆளவே இல்லை, உலகமானது தற்செயலாக ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லது சாத்தானாலே ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது போல் காணப்படுகிறது. தேவன் மகா ராஜாவாக அங்கீகரிக்கப்பட்டால், நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் நிலைமைகள் முற்றிலும் வேறானதாக இருக்கும். இந்த காலத்தில் ஆசீர்வாதத்தை நாம் பெற வேண்டுமென்றால் நாம் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த வேண்டும். விரைவில் மேசியாவின் ஆளுகையில் நீதிக்கு எதிராக இருக்கும் எல்லாம் தண்டிக்கப்படும். நீதிக்கு இசைவாக இருக்கும் அனைவரும் வெகுமானம் அளிக்கப்படுவார்கள். பிறகு நீதியை எதிர்ப்பவர்கள் அனைவரும் தள்ளப்படுவார்கள். நீதியை சிநேகிக்கிற அனைவரும் செழிப்பாவார்கள். அதுதான் தரிசித்து நடக்கிற காலமாக இருக்கும்.

தற்காலத்தில் நாம் விசுவாசித்து நடக்க வேண்டும். ஏனென்றால் நமது இரட்சிப்பு விசேஷமானது. "பரம அழைப்பு" என்பது ஒரு விசேஷித்த வகுப்பாருக்கு ஒரு விநோதமான சலுகை. எனினும் அடுத்த யுகத்தில் விழுகையின் மூலமாக மனுக்குலத்தின் சமநிலையற்ற மனது ஈடு செய்யப்படும். செயல்விளக்கம் அதிகம் தேவைப்படுகிறவர்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்; குறைவாக தேவைப்படுகிறவர்களுக்கு குறைவாக கிடைக்கும். கீழ்ப்படிதலின் கிரியை முழுமையாக அடையாதவர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்பட மாட்டாது என்பது தெளிவுப்படுத்தப்படும். இந்த கிரியைகள் படிப்படியாக அவர்களை முழு மனித பூரணத்திற்கு வழி நடத்தும். தேவன் தம்முடைய தேவை மற்றும் பிரமாணங்களில் நியாயமற்றதை கொடுத்திருக்கவில்லை. அவர் எதிர்பார்க்கிற ஒவ்வொன்றும் நியாயமானதும் அத்தியாவசியமானதும் ஆகும்.

## நமது கர்த்தரின் சுபாவ மாற்றம்

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு நாற்பது நாட்களில் சீஷர்களின் நிலைமையில் நம்மை வைத்துப் பார்க்கும் போது அவர்கள் கணிசமான அளவுக்கு குழப்பத்தில் இருந்திருப்பார்கள் என்று நாம் சொல்லக்கூடும். அவர்களில் ஒவ்வொருவரும் விநோதமான காரியங்களுக்கு சாட்சிகளாயிருந்தார்கள். என்ன என்பதை அவர்களால் விளக்க முடியவில்லை. ஆனால் இயேசுவாக இருக்க வேண்டும் என்பதற்கான –வைகளை அவர்கள் பார்த்திருந்தார்கள். ஒரு சமயத்தில் தோட்டக்காரராகவும் மற்றொரு சமயத்தில் அந்நியராகவும் தோன்றினார். இன்னொரு சமயத்தில், கதவு பூட்டியிருக்கும் போது, சீஷர்கள் மத்தியில் தான் முன்னிருந்த நிலைமையிலே தோன்றினார். கதவு பூட்டியிருக்கும் போது எப்படி ஒரு மனிதன் உள்ளே வர முடியும் என்பதை அவர்களால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஆகையால் கணிசமான அளவு குழப்பம் இருந்தது.

தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்து ஒரு வித்தியாசமான சுபாவத்திற்கு, ஒரு ஆவியின் ஜீவியாக உயிர்த்தெழுப்பினார் என்பதை புரிந்துகொள்ளவே நமது கர்த்தர் பல்வேறு உருவங்களில் வெளிப்படுத்தினார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு காரணமாக கூறுகின்றன. வேத வாக்கியங்கள் அறிவிப்பதாவது: "நமது கர்த்தரே ஆவியானவர்." (2 கொரிந்தியர் 3:17) இரண்டாவது ஆதாம் பரலோக கர்த்தர். அவர் பூமிக்குரிய மனிதன் இயேசுவல்ல. நாம் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து வாழ்வதால் நாம் இந்த விளக்கத்தை உணர்ந்து கொள்ளக்கூடும். இயேசு, ஆவியின் ஜீவியாக ஆகியிருந்தார் என்பதை நாம் பார்த்து புரிந்து கொள்ளக்கூடும். அதாவது தேவ தூதர்களைப் போல் தேவையான சமயத்தில் மனிதர்களைப் போல தோன்ற முடியும். இயேசு சிலுவையில் அறையப்பட்ட அதே சரீரத்துடன், நுழையும் போதும் வெளியேறும் போதும், கதவு திறக்கப்படுவதையும் மூடப்படுவதையும் பார்க்க முடியாமல் அப்போஸ்தலர்களது கண்கள் குருடாக்கப்பட்டு, அவர் உள்ளே தோன்றியிருந்தால், அதற்கான காரணத்தை நாம் கேட்கவே முடியாது. ஆனால் இப்படிப்பட்ட யூகத்தை பதிவானது மறுக்கிறது. "கதவானது மூடப்பட்டிருந்ததும்" கதவு திறக்கப்படுவதை அப்போஸ்தலர்கள் பார்க்கவில்லை என்பதும், கதவை அவர்கள் திறக்கவே இல்லை என்பதும் தெளிவாக அறிக்கையில் இருக்கிறது. தோமா இருந்த போது "கதவு மூடப்பட்டிருக்கும் போது" நமது கர்த்தர் அதே போல தோன்றினார் என்று இரண்டாவது கூற்று கூறுகிறது. (யோவான் 20:19,26)

இயேசு சரீரத்தை கொண்டு வர முடிந்த போது, அவரே ஆவியின் ஜீவியாக உள்ளே வந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இதை அவர் செய்திருந்தால், அவர் சிலுவையில் அறையப்பட்ட அவரது மாம்சீக சரீரத்திலேயே அவர் எழுந்திருந்தார் என்று நினைத்து வஞ்சிக்கப்பட்டிருப்பார்கள். ஆகையால் அவர் பல்வேறு மாம்ச சரீரங்களில் அவர் தோன்றினார். அவர் தான் என்பதற்கு சந்தேகம் வராத அளவுக்கு ஏற்ற சூழ்நிலைகளில் தோன்றினார். சீஷர்கள் பரிசுத்த ஆவியை பெற்ற பிறகு சகலமும் அவர்களுக்கு தெளிவாகும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகையால் அவர் அந்த சமயத்தில் அவர்களுக்கு விளக்கிச் சொல்ல முயற்சிக்கவில்லை. ஆனால் பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் வரும்வரை, அவர் அவர்களோடு தொடர்பு மட்டும் வைத்திருந்தார். பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு அவர்கள் உண்மையான கருத்தில் புரிந்துகொண்டார்கள்.

ஆகையால் நமது கர்த்தர் தோன்றிய பொழுது அவர் தக்க சரீரத்தை எடுத்துக் கொண்டார் என்பதே நமது கருத்து. இது ஒரு வஞ்சகம் அல்ல. சுபாவ மனிதர்களாக இருந்து, மாம்சீக சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கு மாறுவதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது. ஆகையால் "அவர் உயிர்த்தெழவில்லை" என்று கூறுகிற கஷ்டத்திலிருந்து அவர்களுக்கு உதவி செய்யவே இந்த தரிசனமாகும்

## உயிர்த்தெழுதல் மிகவும் தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது

நமது கர்த்தர் மரிப்பதற்கு முன்னதாக இருந்ததைக் காட்டிலும் வித்தியாசமான வல்லமையை உடையவராக இருந்தார் என்பதை சீஷர்களால் காண முடிந்தது. இப்படியாக அவர் நாற்பது நாட்களில் ஒரு சமயத்தில் சில நிமிடங்கள் மட்டுமே அவ்வப்போது தோன்றி மறைந்தார். அவர் ஒரு ஆவியின் ஜீவியாக இருந்தார் என்பதையும் அவர் காற்றைப் போல வந்து போக அவர் வல்லமை உடையவரக இருந்தார் என்பதையும் தேவைப்படும் போது மாம்சத்தில் தோன்றவும் பிறகு மறையவும் அவரால் கூடும் என்பதையும், வெவ்வேறு உருவங்களில் வரவும் முடிந்தவராக இருந்தார் என்பதையும் விளக்கும் நோக்கத்தை நிறைவேற்றவே இந்த தரிசனம் என்பது தெளிவாகிறது. எந்த வகையிலும் அவர்கள் வஞ்சிக்கப்படாதபடி இந்த பெரிய பாடத்தை அவர் திட்டமிட்டார்.

இயேசு எந்த மேன்மையான வழியில் தமது உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தி, அவரது சீஷர்களின் விசுவாசத்தை பலப்படுத்தியிருக்கக் கூடும் என்பதை நம்மால் கற்பனை பண்ணி பார்க்க முடியவில்லை. ஒரு மனிதனாக அவர் தொடர்ந்து அவர்களுடன் இருந்திருந்தால், அவர் அதே சரீரத்துடன், அதே குணநலத்துடன் இன்னும் இருந்தார் என்று விசுவாசித்திருக்கக் கூடும். ஆனால், "இதோ, நான் சகல நாட்களிம் உலக முடிவு பரியந்தமும் உங்களுடன் இருக்கிறேன்" என்று அவர் கூறிய வார்த்தைகளின் பொருள் புரியாமல் இருந்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள், அவர் தோன்றி, மறைந்துவிட்டார் என்பதையும் எனினும் அவர், நாற்பது நாட்கள் முழுவதும் அவர்கள் கூட இருந்தார் என்பதையும், அவர் சுவிசேஷ யுகம் முழுவதும் அவர்களுடன் இருக்கக்கூடும் என்பதையும், யுக முடிவில் தேவைப்படும் போது நேரடியாக திரும்பி வருவார் என்பதையும் புரிந்துகொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இதில் வஞ்சகம் எதையும் நாம் காணவில்லை, ஆனால் வஞ்சகம் தவிர்க்கப்பட்டதையே காண்கிறோம். அவர் ஒரு மாற்றமடைந்த ஜீவியாக இருக்கிறார் என்பதை சாட்சிக் கூற அநேக தரிசனங்கள் தேவைப்பட்டது என்பதை நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கிறோம். சீஷர்கள் அவரை பரலோகத்தில் இருக்கிற ஒரு மனிதனாக நினைத்திருந்தால் பேர் கிறிஸ்தவ சபைகளில் உள்ள நமது நண்பர்கள் போல தீவிரமான தவறுக்கு வழி நடத்தியிருக்கும். பேர் கிறிஸ்தவ நண்பர்கள், இயேசு அதே மாம்ச சரீரத்தில் எழுந்து, அதே மாம்சத்தோடே பரலோகத்தில் இருக்கிறார் என்று நினைக்கிறார்கள். பாடல் ஒன்று கூறுகிறதாவது:

"அவர் பொறுத்த இரத்தம் வழிய ஐந்து காயங்கள்,

கால்வாரியில் பெற்றது;

அவைகள் பயனுள்ள ஜெபங்களை ஊற்றுகின்றன,

அவைகள் எனக்காக மன்றாடுகின்றன."

நமது பேர் கிறிஸ்தவ நண்பர்கள் இதை நம்புகிறார்கள். இயேசுவின் காயப்பட்ட மாம்சத்தில் அடையாளங்களையும் தழும்புகளையும் உடையவராக இருக்கிறார் என்று நீங்கள் நினைத்தால் அவருடைய சீஷர்களும் அதே போல பெற்றிருப்பார்களே என்று அவர்களை கேட்கிறோம். அவர்கள் அதற்கு, ஆம் என்று பதில் கூறுகிறார்கள். அவர்களில் சிலர் மிகவும் பயங்கரமாக தீங்கு விளைவிக்கப்பட்டார்கள். மரிப்பதற்கு முன்னர் பல்வேறு காயங்கள் பட்டவர்கள், சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களை நினைத்துப் பாருங்கள்; விபத்தை சந்தித்து காயப்பட்டவர்கள்! அவர்கள் அந்த காயங்களுடன் அல்லது தலையில்லாமல் பரலோகத்தில் இருந்தால், அவர்கள் உறுப்புகள் சிதைக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.

இந்த கருத்தை பெற்றிருப்பவர்கள் வேதாகமம் விவரிக்கிற இரட்சிப்பை விசுவாசிக்கவே இல்லை என்று நாங்கள் அவர்களுக்கு காண்பிக்கிறோம். நமது நண்பர்களுக்கு நாம் குறிப்பிடுவதாவது: "அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்." "அவருடைய ஆத்துமா தன்னை பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தது." அவர்கள், ஆம், அவரது மாம்ச சரீரம் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம் என்று பதிலளிக்கிறார்கள். அவரது மாம்ச சரீரம் ஆதாமின் மாம்ச சரீரத்தை மட்டுமே இரட்சிக்கும் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆனால் ஆதாமின் மாம்ச சரீரத்துக்கும் மேலாக அவர் பெற்றிருந்தார். ஆதாமின் ஆத்துமா தான் பாவம் செய்தது. ஆதாமை மீட்க இயேசு ஒரு ஆத்துமாவை கொடுத்திருக்க வேண்டும். (ஏசாயா 53:10,12)

சரீரமானது இயேசுவின் ஒரு பகுதியாகவே இல்லாதிருந்தால், மரித்தது இயேசுவல்ல, அவரது சரீரமேயாகும்; அவமானப்பட்டுத்தப்பட்டது அவரல்ல, அவரது சரீரமே. தனது மகிமையை விட்டுவிட்டு பலியிடப்பட்டது அவரல்ல, அவரது சரீரமே. இப்போது சரீரம் இயேசுவாக இல்லாதிருந்தால், பிறகு அவர் ஒரு மனிதனாக நினைக்கும்படி செய்து மனுக்குலத்தை வஞ்சித்தார்; அவர் அப்போஸ்தலரிடம், "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நம் நிமித்தம் தரித்திரரானார்" என்று கூறி அவர்களை வஞ்சித்தார். (2 கொரிந்தியர் 8:9) அவர் சோதிக்கப்பட்டார் என்று அப்போஸ்தலர் பவுல் கூறியது தவறாக இருந்திருக்கும். ஏனெனில் அவர் வேறுபட்ட சுபாவத்தை உடையவராயிருந்தால், அவர் நம்மைப் போல் சோதிக்கப்பட்டிருக்க முடியாது. ஆகையால் வேதாகமம் போதிக்கிறது போல சத்தியமானது இசைவாக இருக்கிறது என்று நாம் காண்கிறோம்.

## உலகத்தின் உயிர்த்தெழுதல்

முதலாம் உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தது, அவரது உயிர்த்தெழுதலைப் போல, அவரது சரீரத்தின் கடைசி அங்கம் பூமிக்குரியதிலிருந்து வானத்திற்குரியதற்கு, தெய்வீக சுபாவத்திற்கு மாற்றத்தை அனுபவிக்கும் போது அது முடிவடையும். உலகத்தின் உயிர்த்தெழுதல் சபையின் உயிர்த்தெழுதலுக்கு முந்திக் கொள்ளாது, ஆனால் பின் தொடர வேண்டும். பழங்கால பாத்திரர்கள்தான் மானிட சுபாவத்தில் உயிர்த்தெழுதலில் முதலாவதாக இருப்பார்கள். ஆனால் அவர்களது உயிர்த்தெழுதல், சபையின் உயிர்த்தெழுதலின் காலத்தில் இராமல் அதற்கு பின்னரே இருக்கும். அப்போஸ்தலர் கூறுவதாவது; "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக மாட்டார்கள்." (எபிரேயர் 11:39,40)

உலகத்தாரின் எழும்புதல் ஒரு வேளை ராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது அல்லது நு று வருடங்கள் வரை ஆரம்பிக்காது. எனினும் அந்த காலக்கட்டத்தில் உயிர்த்தெழுதலின் வேலை அப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கிற நாடுகளிடையே படிப்படியாக நடக்கும். ஜாதிகளும், ஜனங்களும், உறவுக்காரரும், பாஷைக்காரரும் விழித்தெழுவார்கள். அவர்கள் சத்திய அறிவுக்குள்ளாக கொண்டு வரப்பட வேண்டும். அவர்களுக்குள் உயிர்த்தெழுதலின் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அவர்கள் தங்களது சம்மதத்தை தெரிவிக்க வேண்டும். இந்த வேலை மேசியாவின் ஆளுகையின் ஆயிர வருடங்கள் முழுவதும் தொடர்ந்து நடைபெறும்.

உலகத்தின் உயிர்த்தெழுதல் ஆயிர வருட முடிவு வரை முழுமையாக நிறைவடையாது. ஆனால் சபையின் உயிர்த்தெழுதல் ஆயிரம் வருடயுக ஆரம்பத்திலேயே முடிவடையும். இந்த காரணத்தினால் நீதிமான்கள் மற்றும் அநீதிமான்களின் உயிர்த்தெழுதல் ஒரே சமயத்தில் நடைபெறும் என்று கூறுவது சரியாக இருக்காது. உண்மையிலேயே ஆயிரம் வருட முடிவில் தான் உலகத்தின் உயிர்த்தெழுதல் முடிவு பெறும். அவர்கள் பிதாவாகிய தேவனிடம் திருப்பப்படுவார்கள். ஒருவர் விழுந்தாலும் அது பரலோக பிதாவின் சலுகை மற்றும் ஐக்கியத்தில் இழப்பாக இருக்கும். மத்தியஸ்தர் மனுக்குலத்தில் அவரது வேலையை அவர்களுக்குள் நிறைவேற்றும் வரை அவர்கள் விழுகையின் அம்சத்திலிருந்து விடுவிக்கப்படமாட்டார்கள்.

**R5238**

# The Manner of Mother Eve's Temptation
# தாய் ஏவாள் சோதிக்கப்பட்ட விதம்

''தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்தீரியை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ என்றது.'' – (ஆதியாகமம் 3:1)

தேவன் பாவத்தை அறியாதவர் என்கிற வேத போதனை, தேவன் பாவத்தை அப்பியாசப்படுத்துவதில்லை என்பதை குறிப்பிடுகிறது. அவர் பாவம் செய்வதில்லை, பாவத்திற்கு உடந்தையாயிருப்பதில்லை. அவர் பாவத்திற்கு ஒரு உதவியாளாக இருப்பதில்லை. அவர் பாவத்தை எந்தவித சலுகையுடனும் பார்ப்பதில்லை. அவர் பாவமான எதற்கும் தயவு காட்டுவதில்லை, அவரது கண்ணின் வெளிச்சத்தை காண்பிப்பதில்லை, அவரது முகத்தின் வெளிச்சத்தை அவர் காண்பிப்பதில்லை, மாறாக, இவைகளுக்கு முதுகை திருப்புவார். பாவமான எதற்கும் ஒரு சிறிதளவு தயவையும் காண்பிக்கமாட்டார்.

ஆகையால் மனிதன் அதிக பட்ச பாவமுள்ளவனாக இருந்தால், அவனுக்கு அவர் தயவை காண்பிக்க மாட்டார். மனிதன் இப்படிப்பட்ட உச்சகட்ட பாவத்தில் இல்லை என்றும், அவன் பலவீனத்தினால் பாவமுள்ளவனாக இருக்கிறான் என்றும், இந்த பலவீனம் தகப்பனாகிய ஆதாமில் ஆரம்பித்தது என்றும் ஆதியாகமத்தில் பதிவு செய்துள்ளபடி ஆதாமின் கீழ்ப்படியாமையின் பலனாக ஆதாமின் மரண தண்டனை அவன் மேல் வந்தது என்றும் வேத வாக்கியங்கள் கூறுகின்றன. ஆகையால் மனிதன் விருப்பத்தின்படி அல்ல, சுபாவத்தின்படி பாவியாக இருக்கிறபடியால் தேவன் அவனை சாபத்திலிருந்து விடுவித்து, மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் நமது கர்த்தரால் நிறைவேற்றப்படப் போகிற மறுசீரமைப்பு மூலமாக மனிதனை தேவன் தம்முடன் முழு நல்லிணக்கத்திற்கு கொண்டு வரும்படி தீர்மானித்திருக்கிறார்.

அந்த ராஜ்யத்தின் பிரமாணங்களுக்கும் ஒழுங்குகளுக்கும் இணங்காதவர்கள் தெரிந்தே பாவம் செய்கிறவர்களாக கருதப்படுவார்கள். தேவன் அவர்களிடம் எந்த சலுகையையும் காண்பிக்கமாட்டார். அவர்களிடமிருந்து ஒவ்வொரு சலுகையையும் உரிமையும் எடுத்துப் போடுவார். அவர்கள் அழிக்கப்படுவார்கள். ''துன்மார்க்கர் யாவரையும் தேவன் அழிப்பார்'' என்று எழுதப்பட்டதற்கு இணங்க அவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (சங்கீதம் 145:20)

### மன யோசனையின் மூலமாக வஞ்சகம்

புத்தியுள்ள பாவம் இருக்கிறது. நல்லதை அறிந்து தீமை செய்பவர்கள் வேண்டுமென்றே பாவம் செய்கிறவர்கள். வேதத்தின்படி தெரிந்து செய்கிற பெரிய பாவி சாத்தான். அவன் ஆதி முதற்கொண்டு மனுஷ கொலைபாதகன், அவன் சத்தியத்தில் நிலை நிற்கவில்லை என்று நாம் வாசிக்கிறோம். (யோவான் 8:44) அவனது வஞ்சகத்தால் நமது இனத்தை கொலை செய்தான். அவன் உண்மையைச் சொல்லவில்லை, அவன் அதை தவறாக அறிவித்தான். அவன், தாயாகிய ஏவாளிடம், விலக்கப்பட்ட கனியை சாப்பிட்டால் அவள் சாகமாட்டாள் என்றும் அவள் விரும்பிய ஞானத்தையும் அறிவையும் பெறுவாள் என்றும் கூறினான். அவன் நேரடியாக இதை செய்தான் என்று புரிந்துகொள்ளக்கூடாது, இதை அவன் சர்ப்பத்தின் மூலம் செய்தான்.

வேத வாக்கியங்களின்படி சர்ப்பமானது அந்த காலத்தில் ஊர்ந்து செல்லவில்லை. நமது முதல் பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக சர்ப்பமானது புத்தியுள்ளதாக இருந்தது. சாத்தான் இந்த சர்ப்பத்தை பயன்படுத்தி, சிருஷ்டிகருக்கு ஏவாள் கீழ்ப்படியாதபடி ஆலோசனை கூறினான். அதற்கு ஏவாள், ''மனிதனை சிருஷ்டித்த மாபெரும் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியாதிருக்க எனக்கு போதிக்கக்கூடிய இது யார்?'' என்று கேட்டிருக்க வேண்டும். எனினும் சோதனையானது மிகவும் ஒரு வஞ்சனையான முறையில் வந்தது. சர்ப்பத்தின் பேச்சு வார்த்தைகளினால் இல்லாமல், ஆனால் வெளிப்படையாக செய்கைகளினால் இருந்தது. ஆதாம் மற்றும் ஏவாளுக்கு விலக்கப்பட்ட மரத்திற்கு அது தொடர்ந்து சென்று அந்த பழத்தை சாப்பிட்டது.

தாயாகிய ஏவாள், அந்த பழத்தை சர்ப்பம் புசித்ததை பார்த்தாள். அது சகல காட்டு மிருகங்களிலும் புத்திசாலியாக இருந்தது. விலக்கப்பட்ட மரத்தின் கனியை அது புசித்ததால் சகல காட்டு மிருகங்களிலும் சர்ப்பமானது புத்திசாலியாக இருந்ததால் ஏவாளுக்கு இந்த எண்ணம் ஏற்பட்டது. அடுத்து, அந்த மரத்தின் கனியை புசிக்கக்கூடாததற்கான காரணம் அவர்கள் புத்திசாலித்தனத்திற்கு விலக்கி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்ற எண்ணம் அவர்களுக்கு வந்தது. கடைசியாக நீங்கள் அந்த மரத்தின் கனியை புசித்தால், அந்த கனியின் சத்து உங்களை தேவனைப் போல ஆக்கும் என்ற எண்ணம் தோன்றியது. நீங்கள் எல்லாவற்றையும் அறிவீர்கள். சர்ப்பத்தின் மூலமாக சாத்தானின் மறைமுகமான இந்த போதனை தான் ஏவாளிடம் வந்த தீவிரமான வஞ்சகத்தை அமைத்தது.

### சர்ப்பத்தின் மதிப்பு குறைக்கப்பட்டது ஒரு அநீதி அல்ல

தாயாகிய ஏவாள் பாவம் செய்யவில்லை என்கிற விவாதம் எழலாம். அவள் பாவம் செய்தாள். அவள் பெற்ற கட்டளையை மீற அவளுக்கு உரிமை இல்லை என்பதை அறிந்திருந்தாள். ஒருவன் தெரிந்து தவறு செய்யும் போது பாவம் செய்கிறான். ஆயிரம் பாலர் பணத்தை திருடின ஒருவனை மன்னித்துவிடலாம். அவன் ஆயிரம் பாலர்களை திருடுகிறான் என்பதை அவன் அறிவான். அவன் எப்பொழுதாவது பிடிக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அவன் தவறு செய்திருக்கிறான்.

வேறு வார்த்தைகளினால் சொல்லுவோமானால், தவறு செய்யும் விருப்பம், எண்ணம் இருதயத்தில் ஆரம்பிக்கிறது. அப்படிப்பட்ட ஒருவன் ஒரு பாவி– கட்டளையை மீறினவன். ஆகையால் தாயாகிய ஏவாள் கட்டளையை மீறினவள். இந்த அர்த்தத்தில் அவள் தண்டனைக்குரியவள். எனினும் சர்ப்பமானது நீதியான ஜீவியாக இல்லாததினால், அது குற்றவாளிக்குரிய விசேஷித்த தண்டனையை பெற வேண்டும். சாத்தான் குற்றவாளி. அவன் ஒரு நாள் அழிக்கப்படுவான். அவனது ஆவியையும் மனோபாவத்தையும் உடையவர்களும் அழிக்கப்படுவார்கள்.

எனினும் சர்ப்பத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தண்டனை அளிக்கப்பட்டது. அதன் குற்றத்திற்காக அல்ல, ஏனெனில், அது இயற்கைக்கு மாறாக எதுவும் செய்யவில்லை.

ஆனால் சர்ப்பம் பாவத்திற்கான ஒத்த பொருளுடையதாக இருந்தது. ஏனெனில் பாவத்திற்கு அது கருவியாக இருந்தது. சர்ப்பமானது சாத்தானுக்கும் பாவத்திற்கும் அடையாளமாக ஆனது. இஸ்ரயேல் ஜனங்கள் வனாந்தரத்தில் கீழ்ப்படியாமல் போன போது, அவர்களை தேவன் கொள்ளிவாய் சர்ப்பத்தைக் கொண்டு கடிக்கச் செய்தார். மோசேயிடம் தேவன், ஒரு வெண்கலச் சர்ப்பத்தை செய்து அதை ஒரு கம்பத்தில் தூக்கி வைத்து, கடிக்கப்பட்டவன் அதை நோக்கி பார்த்தால் பிழைப்பான் என்று கூறினார். (எண்ணாகமம் 21:6-9) நமது கர்த்தர் கூறியதாவது: "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது போல மனுஷ குமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி உயர்த்தப்பட வேண்டும்." (யோவான் 3:14,15) ஜனங்கள் சுகமடைவதற்காக மோசே சர்ப்பத்தை வனாந்தரத்தில் உயர்த்தினது போல, தேவையான உதவிக்கு கர்த்தரை நோக்கிப் பார்ப்பவர்கள் அனைவரும் குணமடைவார்கள்.

தேவன் சர்ப்பத்திடம், "நீ உன் வயிற்றினால் நகர்வாய்" என்று சொன்ன போது, சர்ப்பத்திற்கு அநீதி இழைக்கப்பட வில்லை. தேவன் தமது புத்தியுள்ள ஜீவிகளிடம் தவிர வேறு யாரிடமும் உடன்படிக்கை செய்யவில்லை. ஆகையால் ஒரு காளை, ஒரு பெரிய தவளையின் நிலைக்கு தாழ்த்தப்பட்டால் நீதி அங்கே மீறப்படவில்லை. மாபெரும் சிருஷ்டிகளிடமிருந்து சர்ப்பம் மற்றும் மற்ற மிருகங்களும் ஜீவனை தகுதியற்ற கிருபையாக பெற்றிருக்கின்றன. எந்த ஜீவிக்கும் தனக்கு வரக்கூடிய சலுகைகள் அல்லது ஆசீர்வாதங்களைப் பற்றி கேள்வி கேட்க குறைந்த பட்ச உரிமை கூட கிடையாது. ஒரு ஜீவியை வாழ்வின் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு தாழ்த்துவதில் எந்த அநீதியும் இல்லை. எனினும் தாழ்மைக்கு இது ஒரு பாடம். இது ஆறாயிரம் வருட மனித வரலாறு முழுவதும் மற்றும் மேசியாவின் வருகிற நீதியான மகிமையின் ஆளுகை, முழுவதும் இலாபகரமானதாக இருக்கிறது.

**R5239**

## Storms on the sea of Life
# வாழ்க்கைக் கடலில் கொந்தளிப்புகள்

"அவர் கொந்தளிப்பை அமர்த்துகிறார்." - சங்கீதம் 107:29

உலகத்தில் ஒரு மனுஷனை தனது சிறிய தன்மையை உணர வைக்கக்கூடிய ஒன்று இருக்கிறதென்றால் அது கடலில் ஒரு புயலாக இருக்கிறது. அந்த புயலை மனித கரத்தினால் அடக்க முடியாது என்று கடலில் பயாணிப்போர் உணருகிறார்கள். நமது தலைப்பு வசனம் சர்வ வல்லமையுள்ள நமது பரம பிதாவை குறிப்பிடுகிறது. எனினும் நமது பரம பிதாவானவர் எப்பொழுதும் கருவிகளை பயன்படுத்துகிறார். அவர் ஒரு மாபெரும் ஜீவியை சிருஷ்டித்த பிறகு ஓய்ந்திருந்தார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. அந்த ஒருவர் சர்வ சிருஷ்டிக்கும் முந்தினவரும் பிதாவானவரின் ஒரே பேறானவருமாகிய வார்த்தையானவர். (கொலோசெயர் 1:15; வெளிப்படுத்தல் 3:14 ) அதிலிருந்து பிதாவானவர் சகல வல்லமையும் கையாண்டது கர்த்தராகிய இயேசுவைக் கொண்டுதான்.

நமது தலைப்பு வசனமாக பயன்படுத்தப்பட்ட வேத வாக்கியம், இந்த தீர்க்கதரிசனத்தைச் சொன்ன சங்கீதக்காரனால் முழுமையாக முற்றிலுமாக புரிந்துக் கொள்ளப்படவில்லை. மற்ற பல வேதவாக்கியங்களைப் போல இதுவும் கிறிஸ்துவின் சபைக்கு ஒரு விசேஷித்த பிரயோகத்தை உடையதாக இருக்கிறது. இவைகளெல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாகும்படியும் அறிவுறுத்தலுக்காகவும் முன்னரே எழுதப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு கூறுகிறார். (1 கொரிந்தியர் 10:11) கிட்டதட்ட அனைத்து தீர்க்கதரிசனங்களும் கர்த்தரையும் அவரது சரீரத்தையும் முதலாவது அங்கீகரிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அநேக கொந்தளிப்புகள் கர்த்தருடைய சீஷர்களாகிய சிறு மந்தை மேல் அவரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. "வாழ்க்கைப் புயல்கள் கொந்தளிக்கும் போது" என்று நாம் சில சமயங்களில் பாடுகிறோம். கொந்தளிப்புகள், சோதனைகள், மற்றும் துன்பங்களை அனுபவிக்காதவர்கள், அவர்கள் தேவனுடைய பிள்ளை என்பதற்கான ரூபகாரங்களில் குறைவுபடுகிறார்கள் என்று அப்போஸ்தலர் தனது நிரூபத்தில் குறிப்பிடுகிறார். ஏனெனில் அவர்களை புத்திரராக எண்ணி நடத்த மாட்டார். (எபிரேயர் 12:7,8)

நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் நாம் பரீட்சைகளையும் சோதனைகளையும் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். இவைகள் நம்மை ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடையும்படிச் செய்யும். (கொலோசெயர் 1:12) இந்த எல்லா அனுபவங்களிலும் பரீட்சையின் போக்கு, நமக்கு தெய்வீக பாதுகாப்பும் பாரமரிப்பும் தேவை என்பதை உணரச் செய்து, கர்த்தரிடம் நம்மை நெருங்கும்படி செய்கிறது. ஆகையால் இந்த கொந்தளிப்புகளிலிருந்து நமக்கு ஒரு ஆசீர்வாதம் வருகிறது. நேரடியான அல்லது உருவகமான புயல்களை தேவன் ஏற்படுத்துகிறார் என்று நாம் நினைக்கக்கூடாது. சாத்தான் பெரிய சத்துருவாக இருக்கிறான். நேரடியான புயல்கள் இயற்கையின் சட்டப்படி வெளிப்படையாக வருகிறது. எனினும் அவைகளை ஏற்படுத்துவதற்கு ஆவியின் ஜீவிகள் தங்கள் வல்லமைகளை அப்பியாசப்படுத்தக் கூடும். நமது ஆண்டவரின் ஊழியக் காலத்தில் இப்படிப்பட்ட ஒருபுயல் கலிலேய கடலில் எழுப்பப்பட்டது. புயலானது திடீரென மிகவும் பெரியதாக வந்தது. கடலானது பெரியதாக இல்லாதிருந்தாலும், படகும் சீஷர்களும் ஆபத்தில் இருந்தாக காணப்பட்டது. அவர்கள் அனுபவமுள்ள மீனவர்களாக இருந்தாலும் அவர்கள் மிகவும் பயத்தில் இருந்தார்கள். படகின் மூலையில் இயேசு உறங்கிக் கொண்டிருந்தார். அவர்கள் அவரிடத்தில் வந்து, "ஆண்டவரே, நாங்கள் மடிந்து போகிறோம், நீங்கள் கவனிக்கவில்லையா?" என்று கூறி அவரை எழுப்பினார்கள்.

### புயல்கள் விசுவாசத்திற்கு ஒரு சோதனை

இயேசுவும் அவரது சீஷர்களும் கடலில் அந்த படகில் இருந்தார்கள் என்பதை சாத்தான் அறிந்திருந்தான். ஒரு

வேளை அவன் இந்த புயலை ஏற்படுத்தி இயேசுவை அழித்து, தேவனுடைய திட்டத்தை நாசம் பண்ணலாம் என்று நினைத்திருக்கலாம். இதை அவன் செய்யவில்லை என்றால், பிதாவானவர் கூட இதை செய்திருக்கலாம் என்று யூகிக்கிறோம். பிறகு இயேசு, பாடத்தை அவர்களுக்கு போதிக்கும்படியாக "அற்ப விசுவாசிகளே, ஏன் சந்தேகப்பட்டீர்கள்?" என்று கூறினார்.

கர்த்தர் புயலை போகவிட்டதற்கான வெளிப்படையான நோக்கம் சீஷர்களின் விசுவாசத்தை சோதிப்பதற்காக ஆகும். மேலும் அவர்களுக்கு ஒரு பாடத்தை போதிக்கவும் இப்பொழுது இந்த வசனம் நமக்கு போதனை கொடுக்கவும் ஆகும். அவர்களது அனைத்து கஷ்டங்களிலும், அது அவர்களது சொந்த பலவீனத்தினாலோ, அல்லது மற்றவர்களது பலவீனத்தினாலோ, அல்லது விழுந்துபோன தூதர்களின் கிரியைகளினாலோ அது வந்திருந்தாலும் சகலமும் தெய்வீக மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது என்பதை எதிர்கால வருடங்களில் அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காகவே ஆகும். சகலமும் நமது நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்றும், சோதனையை தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்கு தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் என்றும் நமக்கு உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. (1கொரிந்தியர் 10:13)

இது கடலின் புயலிலும், கர்த்தர் அதை அடக்கியதிலும் விளக்கப்பட்டது. ஆகையால் நாம் சோதனைகளையும் கஷ்டங்களையும் பெறுவோமானால் நாம் கர்த்தரிடம் சென்று கதற வேண்டும். விசுவாசத்தை அதிகமாக அப்பியாசப்படுத்தி கதற வேண்டும்." எனக்காக என்ன விதி நியமிக்கப்பட்டிருக்கிறதோ, அதிலிருந்து தப்ப முடியாது" என்பது போன்ற ஒரு குருட்டு விசுவாசமாக இருக்கக் கூடாது. பின்னால் சொல்லப்பட்டது, புறஜாதியாரின் நிலைமை, ஆனால் நமக்கு அது மாதிரி அல்ல, கர்த்தர் புயலானது நம்மை அதிகமதிகமாக அழுத்தும்படி செய்வார். அப்பொழுதுதான் நாம் அவரை நோக்கிக் கூக்குரல் இடுவோம். பிறகு அவர் அதை கேட்டு நமக்கு தேவையான விடுதலையை தருவார். அவர் எப்பொழுதுமே வெகு சீக்கிரத்திலே விடுதலையை தரமாட்டார். ஆனால் தப்பிக்கும்படியான ஒரு போக்கை நமக்கு ஏற்படுத்துவார். அவர் புது சிருஷ்டியுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இந்த புயல் நமக்குள்ளே உணர்ச்சியின் புயலாக, கோபத்தின் புயலாக, மனக்கசப்பின் புயலாக இருக்கலாம். இது அப்படியே போகும்படி அனுமதிக்கக்கூடாது. தேவனுடைய உதவிக்காக கூக்குரலிட வேண்டும். இந்த புயல்களை, சோதனைகளை நாம் ஜெயங்கொள்ளும்படி செய்வார்.

### வருகின்ற உக்கிரத்தின் மாபெரும் புயல்

கர்த்தர் இப்பொழுது சபைக்கு பண்ணுகிறதையும், எதிர்காலத்தில் உலகத்திற்கு பண்ணப்போகிறதையும் கலிலேய கடலின் நிகழ்வு சித்தரிக்கிறது. ஆறாயிரம் வருட நீண்ட காலமாக ஆளுகையிலிருந்த பாவம் மற்றும் மரணத்திலிருந்து முழு உலகத்தையும் மீட்கவே தேவன் உத்தேசிக்கிறார். அவ்வப்பொது காணப்படுகிற சிறிய அமைதிகளுடன் இந்த காலம் ஒரு தொடர்ச்சியான புயலாக இருக்கிறது. இந்த காலக்கட்டத்தில் உலகமானது தேவனுடனான இணக்கத்திற்கான விரும்பத்தக்க தன்மைக்கான குறிப்பிட்ட மாபெரும் பாடங்களை பெற்றுக் கொள்கிறது. தேவனுடன் முழு இசைவுடன் இருப்பதற்கும் தெய்வீக வழி நடத்துதலுக்கு மிகவும் கீழ்ப்படிவதற்குமான முக்கியத்துவத்தை சீக்கிரத்தில் மிகவும் உணர்ந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் வருவார்கள். இப்படியாக அடுத்த யுகத்திற்கான அவர்களது கல்வியில் அஸ்திவாரக் கல் போடப்படுகிறது

முடிவாக, கலிலேய கடலின் இந்த புயல், இந்த யுகம் முடிவடைகிற மகா உபத்திரவக் காலத்தை வரைபடமாக சித்தரிக்கிறது. பிறகு சாத்தானின் ஆளுகை முடிவுக்கு வரும். மேசியாவின் ஆளுகை ஆரம்பிக்கும். மகா உபத்திரவ காலத்தை இயேசுவின் ராஜ்யம் கொண்டு வருவதாக நாம் நினைக்கக்கூடாது. சபையுடனாக கிறிஸ்துவின் கிரியை, சபையின் நிறைவு மற்றும் சபையின் மகிமையுடன் கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பது வேதகாம கருத்தாக காணப்படுகிறது. இந்த ஆபத்தின் நாள் குறிப்பாக யேகோவாவின் நாளாக இருக்கும். இதில் தெய்வீக நீதியின் உதவி கொஞ்சம் இருக்கும்.

எனினும் கர்த்தராகிய இயேசுவை தவிர்க்கிற அர்த்தத்தில் நாங்கள் கூறவில்லை. ஏனெனில் தேவன் செய்கிற சகல காரியங்களிலும் அவர் தான் பிரதான காரணியாக இருக்கிறார். ஆனால் மேசியாவின் ராஜ்யம் வரும்போது, கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அப்பியாசப்படுத்தும், பெருமையுள்ளவைகளை தாழ்த்தும், மனிதனின் உக்கிரத்தை, தேவனை துதிக்கும்படியாக செய்யும். மனிதனின் இந்த உக்கிரம், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலத்தை " கொண்டு வரும். இது சில வேதாகம சித்திரத்தில் ஒரு சூழற்காற்றாக, கொந்தளிக்கும் அலையாக, சீறுகின்ற கடலும் அலைகளுமாக குறிப்பிடப்படுகிறது. பிறகு முழு மனித நிர்மாணங்களையும் அழிக்கக்கூடிய மகா புயலின் மத்தியிலே மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அது போர்களை ஒழியப்பண்ணும். சாத்தான் கட்டப்படுவான். தேவனுடைய மகிமையின் அறிவின் ஒளியினால் முழு உலகமும் நிறைந்திருக்கும். "சகல ஜனங்களாலும் விரும்பப்பட்டது வரும்." மேசியாவின் இந்த ராஜ்யத்தினால் புயல் அமைதிப்படுத்தப்படும் என்று உணர்ந்து கொள்ளப்படும். (ஆகாய்:2:7)

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**